# சித்தன்

ஓர்

உயரிய

மாதப்பத்திரிகை.

பழனி.

கமலாநேரு பிரிவு.

வைரமாலை களவு.

சாரதா சட்டம்.

கஸ்டம்சின் தேட்டை.

போட்டிப்பரிசு

முதலியன.

முழுவிபரம்

அட்டவணையில் காண்க.



JL
ᴅ211,N35cN
N36.2.3.,
189929

## உள்ளுரை.


| | | பக்கம். |
|---|---|---|
| 1. | கமலாநேரு காலமானார் | 101 |
| 2. | வாழ்த்து | 104 |
| 3. | பக்த நந்தனார் | 105 |
| 4. | செய்தித் திரட்டு | 107 |
| 5. | வைரமாலை களவு | 109 |
| 6. | நவ நாகரீகத் தீர்ப்பு! | 119 |
| 7. | தற்கால விவசாயி | 123 |
| 8. | தெலுங்கு மொழிப் புலவர் | 125 |
| 9. | கஸ்டம்ஸின் வேட்டை | 130 |
| 10. | சாரதா சட்டம் | 134 |
| 11 | குணவாகடம் | 139 |
| 12 | மருந்து செய் பகுதி | 143 |
| 13. | மூலிகைப் பகுதி | 145 |
| 14. | நாகானந்தன் | 148 |
| 15. | மதிப்புரைகள் | 153 |



### சந்தா விபரம்.

| | | |
|---|---|---|
| வருடம் 1-க்கு உள் நாடு | ... | ரூ 0—8—0. |
| ,, வெளி நாடு | ... | ரூ 1—0—0. |
| தனிப்பிரதி | ... | ரூ 0—0—9. |

### விளம்பர விகிதம்.

| | |
|---|---|
| ஒரு தடவைக்கு முழுப்பக்கம் | ரூ. 5—0—0. |
| ,, அரைப்பக்கம் | ரூ. 3—0—0. |
| ,, கால்பக்கம் | ரூ. 1—8—0. |

விலாசம்:— மானேஜர்,
சித்தன்,
பழனி. S.I.


# "சித்தன்"

"எல்லாரும் இன்புற்றிருக்க நினைப்பதுவே
அல்லாமல் வேறொன் றறியேன்"


ஓர் உயரிய மாதப் பத்திரிகை.

ஆசிரியர்— C. P. சாமி.

| மாலை 2. | பழனி. மார்ச் 1936. | மணி 3. |
|---|---|---|


## கமலாநேருவின் பிரிவு.

பாரதநாட்டின் முடிசூடா மன்னனாய், தியாக உருவாய், விடுதலை வீரராய், வாலிப உலகின் தலைவராய், அச்சந் தவிர்த்த ஆண்மையாளராய் விளங்கும் பண்டித ஜவஹர்லால் நேருவின் உயிரினும் இனிய மனைவியாம் ஸ்ரீமதி கமலாநேரு காலகதியடைந்த துக்கச் செய்தியை கேட்டு உலகமே திடுக்கிட்டதென்றால் அந்தவரின் லக்ஷியம் உயரியதென்பது தெற்றென விளங்குகிறது.

ஸ்ரீமதி கமலாநேரு.



( With the courtesy of Tamil Nadu. )

ஸ்ரீமதி கமலாநேரு சுமார் 1½-௵-க்கு முன்பே நோய்வாய்ப்பட்டார். எனினும், சிறிது குணமடைவதும், மீண்டும் அவஸ்தைப் படுவதுமாக நோய்க்கும் இவருக்கும் கடும் போர்நடந்தே வந்தது. இந்தியாவிலேயே அக்காலத்தில் பயப்படக்கூடிய அவ்வளவு அபாய நிலைமை அவர்நோய் அடைந்தது. சிறைத்தண்டனை அநுபவித்து வந்த ஸ்ரீ ஜவஹர்லால் தன் அன்பான மனைவியைக் காண பல முறை அநுமதிக்கப்பட்டார். காதலன் முகத்தைக் கண்ட காதலியின் நோயின் வேகம் தணிந்தே வந்தது. எனினும் எதிர்பாராதவிதமாக,

89929

நோய் அதிகரிக்கவே, ஜவஹர்லால் விடுதலைசெய்யப்பட்டார். பிர[illegible]களின் யோசனையின்மீது தன் மனைவியை தகுந்தபடி சிகிச்சை செய்ய ஜெர்மெனி தேசத்து வைத்திய சாலைக்குக் கூட்டிச்சென்று சிகிச்சைசெய்வித்தார். வரவர நோய் குணமாவதாகவும், ஸ்ரீ ஜவஹர்லாலும் அவரது மனைவியும் இம்மாதம் முதல் வாரத்திலேயே இந்தியா திரும்பிவிடுவதாகவும் அறிவிக்கப்பட்டது. ஆனால் துரதிர்ஷ்டவசமாக ஸ்ரீமதி கமலாநேரு கடந்த பிப்ரவரி-மீ 28-உ காலையில் உயிர்துறந்தார்.

ஸ்ரீமதி கமலாநேரு செல்வத்திலே பிறந்து, செல்வத்திலே வளர்ந்து, செல்வத்திலேயே நுழைந்தார். அவர் விரும்பிடின் ராஜபோகத்துடன், எவ்வித கஷ்டமும், கவலையும் இன்றி வாழ்ந்து இருக்கலாம். ஆனால் அஃதொன்றையும் அவர் விரும்பிலர். சுகபோகம் அனைத்தையும் துறந்து, சுதந்திர போர்வீரராய் விளங்கும் தன் பர்த்தாவையே பின்பற்றினர். தன்னுடைய சுக க்ஷேமத்தையும், குடும்ப நலத்தையும் கவனிப்பதைவிடுத்து, நாட்டின் நலத்தில் கருத்தும், தேச விடுதலையில் ஆர்வமும் கொண்டு பணியாற்றினர். வீர முழக்கம் செய்தார். தன் பர்த்தாவும், மாமனும் சிறைவாசம் செய்யுங்காலத்து, தானே தன் மாகாண தேசப் பணியைத் திறம்பட நடத்தினர். அதனல் சிறையும் புகுந்தார். ஆஹா! என்னே வீரம்! என்னே உறுதி! இத்தகைய பெண்மணிகளன்றோ நம் நாட்டிற்கு இன்று வேண்டும். இத்தகையாராலன்றோ பெண் சமூகம் விடுதலை பெற முடியும்.

பழமையும் புதுமையும் ஒருங்கே நிறைந்து, தனது கணவரின் லக்ஷியங்களுக்குதவி, பெருந்தூண்டுகோலாய் விளங்கிய ஸ்ரீமதி கமலாநேருவின் மரணத்தால்



தாள், ஸ்ரீ ஜவஹர்லால் அன்புமிக்க மனைவியையும், ஸ்ரீமதி சொரூபராணி நேரு, கடமையிற்சிறந்த — அன்பில் உயர்ந்த மருமகளையும், ஸ்ரீமதி இந்திரா வாத்ஸல்யமிக்க தாயையும் இழந்தனர். ஸ்ரீமதி கமலாநேருவின் பிரிவு எக்காரணத்தாலும் ஈடு செய்ய முடியாத பெரும் நஷ்டமாகும்.

உலகில் பிறந்தவர் அனைவரும் இறப்பது உண்மை. மரணம் தவிர்க்க முடியாதது. அரசன் முதல் ஆண்டி ஈறாக உள்ள அனைவரும் மரணத்தின் கொடிய வலைக்கு இலக்காவது திண்ணம். ஆனால் உலகில் பிறப்பவர்கள் அனைவரும் உலகம் போற்றுபவராயும்-அனைவரும் விரும்பத்தக்கவராயும் மதிக்கத்தக்கவராயும் இல்லை. "தோன்றிற் புகழொடு தோன்றுக" என்ற பொய்யாமொழியார் திருவாக்கை மெய்ப்பிக்கவும், மேற்கூறிய கூற்றை நிதர்சனப்படுத்தவும் தோன்றியவர் ஸ்ரீமதி கமலாநேரு.

ஸ்ரீ ஜவஹர்லால் நேருவுக்கும் அவரது குடும்பத்தார்க்கும் நமது அநுதாபம் உரியதாகுக. ஸ்ரீமதி கமலாநேருவின் வெற்றுடம்பு மாய்ந்தது. ஆனல் அவரது புகழுடம்பு உலகம் உள்ளளவும் மாயாது.

---

காங்கிரஸ் தலைவர் ஸ்ரீ ராஜேந்திர பிரசாத் மார்ச் 8-உ துக்க தினமாக இந்தியாவெங்கும் கொண்டாட அறிக்கையிட்டிருந்தார். ஆனல் அது 11-உக்குறைத்திவைக்கப்பட்டிருக்கிறது. அன்றையதினமே ஜவஹர்லால் ஜெர்மெனியிலிருந்து இந்தியா வருகிறார்.

# வாழ்த்து.

எட்டயபுரம், சேத்தூர் சமஸ்தானங்களின் வித்வான்
காலஞ்சென்ற, மீனாக்ஷிசுந்தரக்கவிராயரவர்களது (பேரன்)

(பரமானந்தம் இயற்றியது.)

---

(அடைக்கலமே-என்ற மெட்டு.)

பல்லவி.

ஆதரிப்பீர் ஆதரிப்பீர் (ஆ)

அநுபல்லவி.

அழகிய நம்சித்தனை அன்புடனே படித்து (ஆ)
பழகிப் பதிபுதித்த பாலன்சித் தன்தன்னையே (ஆ)

சரணம்.

மாதம்ஓர் முறையாக மாண்புடன் மிளிர்வான்
  மாட்சிமிக் கோர்தமது வரையுரை தருவான்
ஏதமில் தொடர்கதை இன்பமு டன்படிக்க
  இனியக விகளுடன் இதம்நமக் குச்சொல்வான் (ஆ)

மாபெருங் கவிபால் மாம்பழக் கவியின்
  மகிமை மிகும்பாடல் வகுத்துரைப் பான்குண
வாகட நூலதனை மகிழ்வுடன் மொழிவான்
  மருத்துவ முறைகளும் வளம்பெறச் சொல்வான் (ஆ)

ஆசிரி யன்பொன்னு சாமியும் வாழ்க
  அருமைப்பா லன்சித்தன் ஆதரவுற்றுவாழ்க
ஆசையுடன்படிக்கும் அன்பர்கள் நிதம்வாழ்க
  ஆவலோடுபர மானந்தங் கொண்டுநீர் (ஆ)



## சினிமா பகுதி.

# "பக்த நந்தனார்"

(ஸ்கேலிடன்.)

---

கொஞ்சநாளைக்குமுன் இவ்வூர் ஜெயராம் தியேட்டரில்" ஸ்ரீமதி கே. பி. சுந்தராம்பாள் முதலியோர் நடித்த ஷை "பக்தநந்தனார்" என்னும் தமிழ் பேசும் படம் காட்டப்பட்டது. அப்படத்தைப்பற்றி வெவ்வேறு அபிப்பிராயங்கள் வெளிவந்துகொண்டிருப்பதற்கிணங்க ஸ்ரீமதி சுந்தராம்பாள் நந்தனாராக நடிக்காது நந்தனளாகவே நடித்திருக்கிறார் என்று கூறுவதுதான் பொருத்தமாகும். ஆனால் பாடல்கள் சம்பந்தப்பட்டவரை ஒருவரும் குறைகூற முடியாதபடி உயர்தரமாகவே அமைந்திருப்பது மறுக்கமுடியாத உண்மையாகும். மேலும் இதற்குமேல் எந்தப் பெண்மணியும் நந்தனாராக நடித்துவிடக்கூடும் என்று துணிந்து கூறவும் முடியாது. நிற்க; பேசும் படக்காட்சிகளால் ஜனசமூகத்துக்கு யாது பயன்என்று கேட்பின், காலதேசவர்த்தமானங்கட்கேற்ப கல்வி, நாகரீகம். புத்துணர்ச்சி, சமரசம், முன்னேற்றம் என்னும் கனிகளை எளிதில் வழங்கி சமுதாயத்தைச் சீர்திருத்தி, ஏனைய நாட்டினரைப்போல் நம் நாட்டினரும் நல்வாழ்வு நடாத்தச்செய்ய படக்காக்ஷிகளைப்போல் சிறந்த சாதனம் வேறில்லை. ஆனால் ஏராளமான பணச்சிலவிலும், கண்ணோக்குடனும், திறமையுடனும் தயார் செய்யப்பட்ட இப்படத்தில் பாமர மக்களுக்காவது படித்தவர்க்காவது, தன் மதிப்பையோ, ஜாதிமத, நில நிற பேதஒழிப்பையோ ஒரு சிறிதாவது வளர்க்கக்கூடிய அம்சம் யாதொன்றுமில்லாது போனது,பொதுவாகத் தமிழர்களின், குறிப்பாகத் தாழ்த்தப்பட்ட மக்களின் துரதிர்ஷ்டமேயாகும். அந்தோ! பிறப்பால் உயர்வு தாழ்வு கற்பிக்கும் வைதீகத்தை வேரறக் களைந்துவிடவும், "எல்லாரும் ஓர்குலம், எல்லாரும்

ஓரினம்'' என்னும் பாரதியார் வாக்கின்படி இந்தியர்கள் யாவரும் ஒன்றுபட்டு வாழ்வதற்கும் வேண்டிய முறையில் நீசனும் ஈசனும் ஐக்யமான இப்புராணக் கதையில் இவர் ஆங்காங்கு சமூக சீர்திருத்த சம்பாஷணைகள் நிகழ்த்தியிருந்தால் இப்படம் வெற்றிகரமாகவே முடிந்துளதென்று கூறலாம். அதைவிட்டு வைதீகத்துக்கும், தீண்டாமைக்கும் வக்கலாத்து வாங்கியதுபோல் கீர்த்தனைகளைமட்டும் இனிமையாகப்பாடி முடித்திருப்பதில் நம்மை இன்னும் வெகுதூரம் பின்னணியில் கொண்டுபோய்ச் சேர்க்குமேயல்லாது ஜாதிப்பித்தம் தெளிய மார்க்கமில்லை. மேலும் இவ்வம்மையார் தெய்வபக்தியோடு தேசபக்தியிலும் ஈடுபட்டிருப்பதால், நம்நாடு எவ்வாறு ஜாதி மதப்பூசல்களால் சேகவலநிலைக்குமாறி, அந்நியர் ஆதிக்கத்திற்குட்பட வேண்டியதாயிற்று என்பதையும் நன்குணராமலிருக்கமுடியாது. எனவே ஹரிஜன சேவையில் ஒவ்வொரு தேசபக்தனும் தேசபந்துவும் போதிய கவனம் செலுத்தவேண்டியதை முன்னிட்டு சங்கீதஞானம், தேசிய ஞானம், உலகானுபவம், செல்வாக்கு இவைகள் நிரம்பப்பெற்ற இவ்வம்மையார் இனியாவது (படத்தில் நடிப்பதாயிருந்தால்) இதுவிஷயத்தில் விசேஷ கவனம்செலுத்தி, பாரதசமுதாயம் சமரசசன்மார்க்கத்தில் செல்லும்படி உதவிபுரிவாரென்று பெரிதும் எதிர்பார்க்கப் படுகிறது.


## "சுசீலா"

### சுகந்த வாசனைத் தைலம்.

நூதனமுறைப்படி தயாரிக்கப்பட்டது. இது கூந்தலை கருமையாக வளரச்செய்யும். ரோமம் உதிர்தல், தலையில் உண்டாகும் பொடுகு முதலியவைகளை நீக்கும்.

புட்டி 1–க்கு விலை அணு 10.

கிடைக்குமிடங்கள்:-

உடுமேலை K. S. ராமனாத அய்யர், ஹோட்டல், பழனி.
பீம விலாஸ், அடிவாரம், பழனி.
சென்ட்ரல் லஞ்ச் ஹோம், பழனி.


## செய்தித் திரட்டு.

வங்காளத்தில் இந்து குடும்பம் ஒன்றில் 18, 20, 22, 24 வயதுள்ள 4-சகோதரிகள் இருந்தனர். அவர்களது பெற்றோர் மிக ஏழ்மையாகிவிட்டதால் வரதக்ஷிணை கொடுத்து தங்களுக்குக் கல்யாணம் செய்யச் சக்திபற்றிருப்பதை அறிந்து ஒரே இரவில் நாலு பேரும் அபின் தின்று தற்கொலை செய்து கொண்டார்கள். ஆனால் ஒரு சகோதரி மட்டும் பிழைத்திருப்பதாகத் தெரிகிறது.

.... .... ....

சீனா தேசத்தின் கிராமமொன்றில் 40-வயதுள்ள மனைவியை இழந்த ஆடவன் ஒருவனும், அவனுடைய மூன்று குமாரர்களும், புருஷனை இழந்த 40-வயதுள்ள ஒரு கைம்பெண்ணை தங்கையும், அவளது 3-குமாரத்திகளை மைந்தர்களும் ஒரே தினத்தில் மணந்துகொண்டார்களாம்.

... ... ...

ஜப்பானில் காட்டப்படும் வெளிநாட்டு சினிமாப்படங்களில் முத்தமிடும் காட்சிகளை கத்தரித்து எடுத்து விடுகின்றனர்.

.... ... ....

ஜெர்மன் சர்வாதிகாரி ஹெர் ஹிட்லருக்கு தினசரி 1000-கடிதங்கள் வருகின்றனவாம்.

.... .... ...

டாக்டர் பண்டுயின் என்ற பிரஞ்சு நிபுணர் ஒரே கர்ப்பத்தில் 9 குழந்தைகள்கூட பிறக்கமுடியுமென்று கண்டுபிடித்திருக்கிறாராம்.

.... .... ....

இங்கிலாந்து தேசத்தில் சராசரி தினம் ஒன்றுக்கு 1400-குழந்தைகள் பிறக்கின்றனவென்று ஒரு கணக்கு கூறுகிறது.

ஜுகோஸிலாவிலுள்ள மாரிபார் என்ற கிராமத்தில் ஒரு குடியானவர் ஒரு பூனை வளர்த்து வந்தார். அது பலநாள் ஆகாரமில்லாமலேயே இருந்து வந்தது. அவருக்கு ஆச்சரியத்தை உண்டாக்கியது. ஆனால் உண்மை சில தினத்தில் வெளியாயிற்று. மாட்டுக்கொட்டத்தில் அப்பூனை ஒரு மாட்டின் மடியில் பால் உறிஞ்சிக்கொண்டிருப்பதைக் கண்டாராம்.

ஓர் ரஷ்யரை மொராவியாவில் போலீசார் கைது செய்து அவரை போட்டோ பிடித்தார்களாம். 4-தடவை முயற்சித்தும் அவருடைய படம் காகிதத்தில் விழவில்லையாம். தன்னை விடுவித்தால் அந்த ரகசியத்தைச் சொல்வதாக அவர் சொல்லியும் போலீசார் மறுத்துவிட்டனராம்.

பிரிட்டனில் 1935-ஒல் 16698 புஸ்தகங்கள் வெளியிடப்பட்டிருக்கிறதாக கணக்கெடுக்கப்பட்டு இருக்கிறதாம்.

ஸ்ரீமதி கமலாநேரு இறந்த அன்று இவ்வூரில் கடையடைப்பும், பொதுக்கூட்டமும் நடைபெற்றது. மாலையில் காங்கிரஸ் தொண்டர்கள் ஊர்வலம் வந்து பொதுக்கூட்டம் கூட்டி ஓர் துக்கத் தீர்மானமும் நிறைவேற்றினார்கள்.

நீங்கள் இதைப்படித்ததுண்டா?

மனச்சாந்தியும், அன்பும், ஒழுக்கமும் அடையவிரும்பும் ஒவ்வொருவரும் படிக்கவேண்டிய புஸ்தகம்.

மார்க்க அரேலியர்

**ஆத்மசிந்தனை.**

சக்ரவர்த்தி ராஜகோபாலாச்சாரியார் மொழிபெயர்த்தெழுதியது. எளிய தமிழ். இனிய நடை. ஆண் பெண் அனைவர்க்கும் இன்பமும், பயனும் அளிக்கத்தக்கது.

பிரதி 1-க்கு விலை அணா 8.

பத்தணா ஸ்டாம்பாக அல்லது மணியார்டர் செய்தால் ஒரு பிரதி அனுப்பப்படும்.

கிடைக்குமிடம்:-

மானேஜர், **சித்தன்** காரியாலயம், பழனி. S. I.

# வைரமாலை களவு.

("இளம்பிறை")

திங்கட்கிழமை காலை ஏழரைமணியாகியும் படுக்கையைவிட்டு எழுந்திருக்க மனமில்லாதவனாய் அயர்ந்து நித்திரை செய்துகொண்டிருந்தேன். அன்றையத் தினம் பாலக்கரை சினிமா தியேட்டரில் நடைபெற்ற "டுபான் மெயில்" என்ற பேசும் படக்காக்ஷியைப் பார்த்துவிட்டு வந்திருந்தேனாதலால் நான் நேரத்தை அறியாமல் உறங்கிக்கொண்டிருந்ததில் வியப்பொன்றுமில்லை.

"டிங் டிங்" என்று மணி எட்டடித்தது. படுக்கையைவிட்டு எழுந்திருக்கலாமா? அல்லது இன்னும் சிறிது நேரம் உறங்கலாமாவென்று நினைத்துப் படுக்கையில்புரண்டுகொண்டிருந்தபோது யாரோ என்னை முதுகில் தட்டியதுபோலிருந்தது. அப்பொழுது எனக்கு வந்த கோபத்திற்கோரளவில்லை. ஆத்திரத்தோடு எழுந்து அவ்வாறு செய்யத் துணிந்த நபர் யாரென்று நோக்கினேன். அங்கே நான் யாரைக்கண்டேன் தெரியுமா? எனது நண்பர் துப்பறியும் துளசிராம் புன்னகையுடன் என்னை நோக்கிக்கொண்டிருக்கக்கண்டேன்.

அவரைக் கண்டதும் திடுக்கிட்டெழுந்து அவரை வரவேற்க "என்ன ஸார், இவ்வளவு அதிகாலையில் இங்கு வந்திருக்கிறீர்! எனக்கு ரொம்ப ஆச்சரியமாயிருக்கிறதே. ஏன், என்ன விசேஷம்?" என்று வினவினேன்.

அவர் பதிலொன்றும்பேசவில்லை. "புறப்படுங்கோஸார்" என்று மட்டும் கூறினார்.

"எங்கே ஸார்?" என்றேன் நான்.

"எங்கேயா! பிரபு ரகுநாத முதலியார் வீட்டிற்குத் தான்" என்றார் அவர்.

"ரகுநாத முதலியாரா? அவர் வீட்டில் என்ன விசேஷம்?" என்றேன்.

அவருடைய மாளிகையிலிருந்த இரண்டுலக்ஷ ரூபாய் விலை மதிப்பிடத்தக்க வைரமாலை ஒன்று காணாமற்போய் விட்டதாம். அதைக்கண்டுபிடித்துத் தன்னிடம் சேர்ப்பிக்க வேண்டுமென்று அவர்என்னைக் கேட்டுக்கொண்டிருக்கிறார்.

"ஆகா! அப்படியா! அவர் தங்கள் துப்பறியும் நிபுணத்துவத்தில அபாரமான நம்பிக்கையும், பக்தியையும் கொண்டிருக்கிறார் என்பதை அது விளக்குகிறது" என்றேன்.

"அதையெல்லாம் அப்புறம் பேசிக்கொள்ளலாம். புறப்படுங்கோ ஸார்," என்று துரிதப்படுத்தினார் துளசிராம்.

"புறப்படுவதில் தடையில்லை. ஆனால் அதற்குமுன்னால் ரகுநாத முதலியார் வீட்டில் எவ்வாறு வைரமாலை களவாடப்பட்டது? ஏன் களவாடப்பட்டது? எப்பொழுது களவாடப்பட்டது? "முதலிய விபரங்களை அறிவிக்க வேண்டுகிறேன்" என்றேன.

துளசிராம் புன்னகை செய்தார். "புறப்படுங்கோ ஸார், வழியில் அந்தக் கதையையெல்லாம் விரிவாகச் சொல்லுகிறேன்" என்றார்

ஆகவே நான் வெளியிற்செல்லும்போது உடுத்தவேண்டிய உடுப்புகளை அணிந்துகொண்டு அவருடன் வெளிக்கிளம்பினேன்.

ஜான்ஸன் வீதியைத்தாண்டி பட்டாபிராம்பிள்ளை வீதி வந்தோம். மௌனமாக எதையோ தீவிரமாக யோசனை செய்துகொண்டுவந்த துளசிராம், அவருடைய யோசனைக்கு முற்றுப்புள்ளி வைத்துவிட்டு என்னுடன் சம்பாஷிக்க ஆரம்பித்தார்.

"வைரமாலை களவுபோன கதையைச் சொல்லட்டுமா?" என்று வினவினார் துளசிராம்.



'ஆஹா! என்று சிரித்துக்கொண்டே சொன்னேன்நான்'

"இந்த ஊரில்—ஏன், இந்த திருச்சி ஜில்லாவிலேயே—செல்வத்தில் முதன்மை பெற்றவர் ரகுநாத முதலியாரே. ரகுநாதமுதலியார் நல்ல குணமும், தாராள சித்தமும் உடையவர். அவருக்கு மூன்று புத்திரர்களும், ஒரு புத்திரியும் உண்டு. அவருடைய மூத்த குமாரர் இங்கிலாந்தில் பாரிஸ்டர் பரீக்ஷைக்குப்படித்துக்கொண்டிருக்கிறார். அவருடைய மற்ற குமாரர்கள் இருவரில் ஒருவர் லாகூரிலும், மற்றொருவர் கான்பூரிலும் படிக்கிறார்கள். அவருடைய மனைவியும் ஒரு செல்வப் புத்திரியுமே இப்பொழுது இங்கு இருந்துவருகிறார்கள்.

முதலியார் ஒரு புதுமாதிரியான மனிதர். மற்ற ஒரு சில பணக்காரர்களைப்போல் பணத்தை இரும்புப் பெட்டிகளில் தூங்கச்செய்யும்வழக்கம் அவரிடம் கிடையாது. அவருடைய மனதிற்கு நியாயமாகத்தோன்றும் எந்த விஷயத்திற்கும் அவர் லக்ஷக்கணக்காக ரூபாய்களைச் செலவு செய்வதில் சிறிதும் பின்வாங்குவதில்லை. இத்தகைய இயற்கை குணம் படைத்த அவவொரு விசித்திரப் பேர்வழி. அவருடையகண்களுக்கு அதிசயமாகத்தோன்றும் எந்தவஸ்துவையும் அவர் ஆயிரக்கணக்கான ரூபாய்கள் கொடுத்து வாங்கிவிடுவார். அப்படி அவர் வாங்கும் வஸ்துக்களையெல்லாம் ஒன்றுசேர்த்து அவருடைய மாளிகையில் ஒரு சிறு காக்ஷி சாலையை அமைத்திருக்கிறார். அச்சிறு காக்ஷிசாலையிலிருக்கும் அதிசய சாமான்களையும், அவைகளைத் தேடிப்பிடித்து வாங்கத் தான்பட்ட சிரமங்களையும் தன் நண்பர்களிடம் சொல்லியும், அவைகளை அவர்களுக்குக் காட்டி மகிழ்வதும் அவர் வேலை.

ஒருசமயம் அவர் சூரத் ஜில்லாவிற்குச் சென்றிருந்தபோது ஒரு ஒப்பற்ற அழகிய வைரமாலையொன்றை ஒரு மார்வாடியிடம் இரண்டு லக்ஷ ரூபாய்க்கு வாங்கினார். வழக்கம்போல் அவர் அதைத் தன்னுடைய காக்ஷி சாலையில் அமைத்து அதன் பெருமையை எல்லோரிடமும் கூறி மகிழ்ந்து வந்தார்.

இவ்வாறிருக்கையில் அவருடைய ஐம்பத்தைந்தாவது ஜனன விழா வந்தது. அவர் தன்னுடைய ஜனன விழாவைக்

கொண்டாடுவதற்காகத் தன்னுடைய நண்பர்களுக்கெல்லாம் ஒரு விருந்து நடத்தினார். அன்றையதினம் இரவு பன்னிரண்டு மணி வரையில் அவர் தன்னுடைய நண்பர்களுடன் பேசிக்கொண்டிருந்துவிட்டு அதற்குமேல் அவர்களை அவர்களில்லத்திற்கேக அனுமதிகொடுத்தார். அடுத்த நாட் காலை எட்டரை மணிக்கு அவர் அவருடைய படுக்கையை விட்டு எழுந்தபோது அவருடைய காக்ஷிசாலைச் சேவகன் ஓடி வந்து காக்ஷிசாலையிலிருந்த வைரமாலையைக் காணோமென்று அறிவித்தான். பிரபு ரகுநாத முதலியார் ஒரு நிமிஷம் திகைத்துவிட்டார். அவருக்கு ஒன்றுமே தோன்றவில்லை. அந்த வயது முதிர்ந்த சேவகன் ஒருவனைத்தவிர சந்தேகப்பட வேண்டியவர்கள் ஒருவருமில்லை. ஆனால் அச்சேவகனோ சற்குணங்களுக்கே இருப்பிடமென்று சொல்ல வேண்டும். ஐம்பது வருஷங்களாக அவன் ரகுநாத முதலியாரிடமும் அவருடைய பெற்றோர்களிடமுமாக சேவகம் செய்து வந்திருக்கிறான். அந்நாட்களில் அவன் ஒரு செல்லாத பைசாவைக்கூடத் திருடியதில்லை. ஆகலால் அத்தகைய உத்தமச் சேவகன் மீது குற்றத்தைச் சுமத்த விரும்பாத அவர் என்னையழைத்து இந்த வைரமாலை களவுபோன மர்மத்தைக் கண்டுபிடித்து அதைத் தன்னிடம் சேர்ப்பிக்க வேண்டுமென்று கேட்டுக்கொண்டிருக்கிறார்.

இவ்வளவுதான் விஷயம். இனி நடக்கும் சம்பவங்களை நீரே நேரில் பார்த்துக்கொள்ளலாம்’’ என்று கூறி முடித்தார் எனது துணைவர் துளசிராம்.

இதற்குள் நாங்கள் வந்துசேரவேண்டிய ரகுநாதமுதலியாரின் ‘‘ரங்கவிலாசம்’’ என்ற அலங்கார மாளிகை வந்து சேர்ந்தோம். ரங்க விலாசம் என்ற அந்த மாளிகை மேனாட்டு முறையில் நன்றாக அழகுபெற கட்டப்பட்டிருந்தது. நாங்கள் அங்கு போய்ச் சேர்ந்ததும் துளசிராம் அவருடைய பெயர் பொறித்த ‘‘விஸிட்டிங்’’ கார்டு ஒன்றை அங்கிருந்த பியூன் மூலம் உள்ளே அனுப்பினார். அடுத்த நிமிஷம் எங்களுக்குமுன் திடசரீரியான ஒரு கம்பீரமான மனிதர் தோன்றினார். அவர் துளசிராமை புன்சிரிப்புடன் வரவேற்று வந்தனம் செலுத்தி உள்ளே அழைத்துச்சென்றார். நானும் அவரைப் பின் தொடர்ந்து சென்றேன். அந்த மனிதர் என்னைப் பற்றியும் துளசிராமை நோக்கி நான் யாரென்று விசாரித்தார்.



‘‘பற்பல பத்திரிகைகளிலும் சொந்தப்பெயருடனும், புனைப் பெயருடனும் கட்டுரை எழுதி வரும் ‘‘இளம்பிறை’’ என்பவர் இவரே என்று கூறி என்னை அந்த மனிதருக்கு அறிமுகம் செய்து வைத்தார் துளசிராம்.

‘‘அப்படியா! ரொம்ப சந்தோஷம். வாருங்கள்; வாருங்கள். ......... நான் உங்களை நேரில் கண்டதில்லையானாலும் தங்கள் சாமர்த்தியத்தைப்பற்றி பன்முறை கேட்டிருக்கிறேன்’’ என்று கூறி கைகுலுக்கி வரவேற்றார்.

அன்பர் துளசிராம், அவரே ரகுநாத முதலியாரென்றும், அவருடைய கர்வமும், டாம்பீகமுமற்ற எளிய வாழ்க்கையைக்கண்டு எல்லோரும் ஆச்சரியப்பட நேரிடுகிறதென்றும் என் காதுகளில் ரகசியமாகக் கூறினார்.

ரகுநாத முதலியாரைத் தொடர்ந்து சென்ற நாங்கள் கடைசியில் அவருடைய காக்ஷிசாலையடைந்தோம் அது ஒப்பற்ற அதிசய சாமான்களால் நிறப்பப்பட்டு பேரழகுடன் விளங்கிக்கொண்டிருந்தது. அதை சுற்றியிருந்த ரோஜா, மல்லிகை, முல்லை, மா, பலா முதலிய செடி கொடி மரங்களால் சூழப்பட்ட நந்தவனத்தின் மத்தியில் போடப்பட்டிருந்த வட்ட மேஜையைச் சுற்றி நாங்கள் மூவரும் அமர்ந்தோம். நறுமணத்துடன் கூடிய தென்றற் காற்று ஜிலுஜிலுவென்று வீசி எங்கள் உள்ளத்தை ஆனந்தத்தில் மூழ்கச் செய்தது.

துளசிராம் வைரமாலை களவு சென்றதைக் குறித்து பிரபு ரகுநாத முதலியாரிடம் நடந்த விருத்தாந்தத்தை முழுவதும் அறிந்தார்.

தங்களுடைய நாற்பத்தைந்தாவது ஜெனன விழாவைக் கொண்டாடியபோது பல நண்பர்களுக்கு விருந்தளித்ததாகக் கேள்விப்பட்டேன். அவர்கள் யார்? அவர்கள் பெயரென்ன? என்ற இந்த விபரங்களையெல்லாம் அறிய விரும்புகிறேன். (புன்முறுவலுடன்) அறிவிக்க முடியுமா?’’

ரகுநாத முதலியார்:– ‘‘ஆஹா! தாராளமாய் சொல்லுகிறேன். அன்றையத்தினம் நான் என்னுடைய ஆப்த நண்பர்கள் ஐவருக்கு மட்டுந்தான் விருந்து நடத்தினேன். அவர்கள் பெயர் முறையே வேதாசலம் நாயுடு, தணிகாசல முதலியார், ஜெகன்னாத பிள்ளை, குமாரசாமிப் பண்டாரம், பாலசிங்கம் நாடார் என்பனவாகும்.’’

துளசிராம்:— "இந்த நண்பர்கள் ஐவரில் யார்மீதாவது தங்களுக்குச் சந்தேகம் உண்டா?"

ரகுநாத முதலியார்:— "அந்தோ! அப்படி நினைக்காதீர்கள். அவர்கள் ஐவரும் கண்ணியமான பிரபுக்கள். அவர்கள் இந்த அற்பத் தொகையாகிய இரண்டு லக்ஷ ரூபாய்க்கு ஆசைப்படக் கூடியவர்களல்ல."

துளசிராம்:— "தங்களிடம் அறியவேண்டிய விஷயங்களை அறிந்துகொண்டேன். இனி தங்கள் சேவகனிடம் சில தகவல்களை விசாரித்தறியவேண்டும்." என்றுகூறி சேவகனை வரவழைத்தார். அவர்களிருவருக்கும் பின்வருமாறு சம்பாஷணை நடந்தது.

துளசிராம்:— "உனது எஜமானருடைய ஜனன விழாக் கொண்டாட்டத்தைமுன்னிட்டு அவருடைய நண்பர்களுக்கு விருந்தளிக்கப்பட்டபோது எத்தனை மணியிருக்கும்? அப்போது நீ எங்கிருந்தாய்?"

சேவகன்:—"அப்பொழுது இரவு பத்து மணியிருக்கும். நான் அன்று முழுவதும் பட்ட கஷ்டங்களால் அயர்ந்து நித்திரை செய்துவிட்டேன்."

துளசிராம்:— "கடைசியாக நீ எத்தனை மணிக்கு எழுந்திருந்தாய்? வைரமாலை களவுபோன செய்தி உனக்கு எப்பொழுது தெரியும்?"

சேவகன்:— "விடியற்காலை ஐந்துமணிக்கு வழக்கம் போல் எழுந்தபோது சாஷிசாலையின் சாமான்கள் சிதறுண்டு போயிருந்ததைக்கண்டு அவைகளை சீர்திருத்தம் செய்தேன். அப்பொழுதுதான் வைரமாலை களவுபோனதை அறிந்தேன்.

துளசிராம்:— நீ இருக்கும்போது காஷிசாலைக்கு அடிக்கடி வருபவர் யார்?"

சேவகன்:— அதைத் திட்டமாய்ச் சொல்லமுடியாது. எல்லோரும் வருவார்கள். ஆனால் எஜமானருடைய நண்பர்கள்தான் அதிகம் வருவார்கள்.

துளசிராம்:— 'சரி. உன்னிடம் தெரிந்துகொள்ளவேண்டியது அவ்வளவுதான்' என்று கூறி அவனை அனுப்பிவிட்டு, மீண்டும் ரகுநாத முதலியாரிடம் வந்து "பிரபுவே! நீங்கள்



இப்பொழுது ஒரு காரியம் செய்யவேண்டும். அதாவது சென்ற சனிக்கிழமையன்று நீங்கள் தங்களுடைய ஜனன விழாவைக் கொண்டாடுவதாக தங்களுடைய நண்பர்களுக்கு அறிவித்து அவர்களை வரவழைத்ததுபோன்றே நாளைய தினம் தாங்கள் தங்களுடைய புத்திரியின் ஜனன விழாவை நாளைய தினம் கொண்டாடுவதாக அவர்களுக்கு அறிவித்து அவர்களை வரவழைக்கவேண்டும். இந்த விஷயம் எனது தூண்டுகோலால் சிருஷ்டிக்கப்பட்ட தென்பதை அவர்கள் அறியக்கூடாது. அவ்வாறு நீங்கள் அவர்களை வரவழைத்துவிட்டீர்களானால், திண்ணமாய் தங்களுடைய வைரமாலையை நாளையதினமே நான் தங்களிடம் ஒப்புவிக்கிறேன்" என்று கூறி அடுத்தநாள் வருவதாகக்கூறி விடைபெற்றுக்கொண்டு வீடுதிரும்பினார் துளசிராம்.

எனக்குப் பெரிய ஆச்சரியமாயிருந்தது. துளசிராம் "தோழரே! எவ்வாறு நீங்கள் இவ்வளவு திட்டமாய் வைரமாலையை நாளையதினம் ரகுநாத முதலியாரிடம் சேர்ப்பிப்பதாகக் கூறிவிட்டு வந்தீர்!,, என்று வியப்புடன் கேட்டேன். அவர் மௌனமாய் "நாளைய தினம் நீர் இதைக் கண்கூடாகக் காணலாம்" என்றார்.

அடுத்தநாள் மாலை ஐந்து மணியிருக்கும். ரங்கவிலாசத்தில் ஒரு வட்டமேஜையைச் சுற்றி நானும், துளசிராமும், ரகுநாத முதலியாரும், அவருடைய நண்பர்கள் ஐவருமாக அமர்ந்திருந்தோம். ஏதோ நினைத்த துளசிராம் "பிரபுவே! இன்றைய தினம் இந்த நண்பர்களுக் கெல்லாம் காபி தயார்செய்து கொண்டுவந்து கொடுக்கவேண்டிய வேலையை நான் ஏற்றுக்கொள்கிறேன்" என்று கூறி அவர் பதிலைச்கூட எதிர்பாராது உள்ளே சென்று சில விநாடிகளில் காபியுடன் திரும்பி வந்தார். ஒவ்வொருவருக்கும் முன்னால் ஒவ்வொரு கோப்பையை வைத்துவிட்டு பின் வருமாறு சொல்லலானார். "தோழர்களே! உங்களில் ரகுநாத முதலியாரின் வைரமாலையைக் களவாடியவரை நான் நன்கு அறிவேன். அவ்வாறு களவாடியவருக்கு முன்னால் நான் விஷம் கலந்த காபியை வைத்திருக்கிறேன். அவ்வாறு எடுத்தவர்கள் மன்னிப்புக் கேட்டுக்கொண்டு ரகுநாத முதலியாரின் வைரமாலையைத் திருப்பிக்கொடுத்தால் அவருடைய குற்றத்தை மன்னித்து விடுவேன். இல்லையேல் அவர் விஷக்காப்பியை அருந்தி

அவசியமாகத் தன்னுயிரை இழக்க நேரிடுமென்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்" என்றார்.

சிறிதுநேரம் நிசப்தமாயிருந்தது. "சரி; காபியை சாப்பிடுங்கள்" என்றார் ரகுநாத முதலியார். எல்லோரும் காபியை அருந்தினர்.

அடுத்த வினாடி காபியுண்ட பிரபுக்களில் ஒருவராகிய பாலசிங்கம் நாடார் மயக்கமுற்று நாற்காலியில் சாய்ந்தார். அதன் மர்மம் ஒருவருக்கும் தெரியவில்லை. துளசிராம் அவரை அவருடைய வீட்டிற்கு அனுப்பச் செய்துவிட்டு எங்கேயோ சென்றார். அன்றிரவு எட்டு மணிக்கு ரகுநாத முதலியார் வீட்டிற்கு வந்த துப்பறியும் நிபுணர் துளசிராம் வைரமாலையுடன் திரும்பி வந்தார்.

"தங்கள் அறிவு போற்றத்தக்கது. இவ்வைரமாலையைத்தாங்கள் எவ்வாறு கண்டுபிடித்தீர்கள் என்பதை விளக்கவேண்டும்" என்றார் ரகுநாத முதலியார்.

துளசிராம் புன்னகை செய்தார். "பிரபுவே! தங்கள் வைரமாலை களவுபோன செய்தியைக் கேட்டபோதே நான் தங்கள் சிநேகிதர்கள் மீது சந்தேகங்கொண்டேன். அதைத் தங்களிடம் விசாரித்தறிந்ததிலும், தங்கள் சேவகனை விசாரித்தறிந்ததிலிருந்தும் ஊர்ஜிதம் செய்துகொண்டேன். ஆதலால் நான் தங்கள் நண்பர்களை மீண்டும் வரவழைக்கச் செய்து அவர்களுக்கும் காபியை அளித்தேன். உண்மையில் நான் அந்தக் காபியில் விஷத்தைக் கலக்கவில்லை. சும்மா வெறும் மிரட்டலுக்காகவும், அதன் பயனாக உண்மை உணர்வதற்குமே அவ்வாறு கூறினேன். எனது துப்பறியும் தொழிலில் நான் அடைந்துள்ள மகத்தான வெற்றிகளை அறிந்த அந்த பிரபுக்களடங்கிய கூட்டத்தில் உண்மைக் குற்றவாளியாகிய பாலசிங்கம் நாடார் நினைத்து நான் அவருடைய திருட்டைக் கண்டுபிடித்துவிட்டதாகவும் ஆகவே அவருக்கே விஷபானத்தை அளித்திருப்பதாகவும் கருதித் திகிலடைந்துவிட்டார். ஆனால் கண்ணியமான பிரபுக்கள் அடங்கிய அக்கூட்டத்தில் அவர் தன்னுடைய திருட்டுத் தனத்தை வெளிப்படுத்த விரும்பாதவராய், அவமானத்திற்குப்பயந்து கண்ணை மூடிக்கொண்டு காபியை சாப்பிட்டுவிட்டார். 'புலி கொல்லாவிடினும் கிலி கொல்லுமன்றோ'! அது போன்றே காபியில் விஷம்



விஷங்கலந்திருப்பதாக எண்ணிய பாலசிங்கம் நாடார் விஷக் கிலியின் பயனாய் மூர்ச்சையுற்று நாற்காலியில் சாய்ந்தார். அதன் உண்மையை உணர்ந்த நான் அவருடைய வீட்டை அடைந்து அவருடைய பொக்கிஷ அறையைச் சோதனை செய்தேன். அங்கே இந்த வைரமாலை கிடைத்தது" என்று விரிவாகக் கூறினார் துளசிராம்.

பிரபு ரகுநாத முதலியார் அடைந்த மகிழ்ச்சிக்கோர் அளவில்லை. அவர் துப்பறியும் துளசிராமைப் பலவாறு போற்றி அவருக்குச்சன்மானமாக இரண்டாயிரம் ரூபாய்க்கு செக் ஒன்று எழுதிக்கொடுத்தார்.

---

தென் இந்தியா

## மோட்டார் பாடசாலை.

(1916ல் ஸ்தாபிக்கப்பட்டது)

3 மாதத்தில் மோட்டார் ஓட்டக் கற்றுக் கொள்ளலாம்

மோட்டார் வண்டிகளை ஓட்டவும், மெஷின்களைக் கழற்றவும், பூட்டவும், எலக்டிரிக் வேலைகளையும், மலைப்பிரதேசங்களில் கார்களை ஓட்டவும், வேறு பல சீர்திருத்தங்களை செய்யவும், கற்றுக்கொடுத்து தேர்ச்சியடைந்தபின் கவர்ன்மெண்டு லைசன்சும், பாடசாலை சர்ட்டிபிகேட்டும் கொடுக்கப்படும். வாசிப்பு இல்லாதவர்களுக்கும் சுலபமாய் கற்றுக்கொடுக்கப்படும்.

தேர்ச்சிபெற்றால் ரூ. 35 முதல் ரூ. 100 வரையிலும் பெறலாம். மோட்டார் மெக்கானிக் தமிழ் புத்தகம் 50 படம் 200 பக்கம் விலை ரூ. 2.

தபால் செலவு வேறு. விபரத்துக்கு எழுதவும்.

தென் இந்திய மோட்டார் எஞ்ஜினிரிங்
ஒர்க்ஸ் & பாடசாலை, மயிலாப்பூர் P. O., சென்னை.

கீழ்கண்ட விலாசத்திலும் கிடைக்கும்:—

மானேஜர், "சித்தன்"
காரியாலயம், பழனி. S. I.

## விடுபட்ட எழுத்துப் போட்டி 2.

# ரொக்கப்பரிசு ரூ. 100.

முதல் பரிசு ரூ **50.** இரண்டாவது ரூ. **30.**
மூன்றாவது ரூ. **20.**

முடிவு தேதி **30—3—36.**

கோடிட்ட இடங்களைப்பூர்த்தி செய்து விடை ஒன்றுக்கு இரண்டணா வீதம் தபால் தலைகளும் விடைகளும் 30—3—36 க்குள் தபாலில் சேர்க்கப்படவேண்டும், 30-3-36 அன்றயை தபாலிலும் சேர்க்கலாம். விடைகளை தனிக்காகிதத்திலும் எழுதலாம். சீலிட்ட சரியான விடை "சித்தன்" ஆபீசில் டிபாசிட் செய்யப்பட்டிருக்கிறது. முடிவு எப்ரல்-மீ "சித்தனில்" வெளியாகும். இந்தப் போட்டியில் இரண்டு தப்புள்ள விடைக்கும் பரிசு உண்டு. கீழே உள்ள 9-ல் முதலாவது பிரீதி, 9 வது மௌகலி. பாக்கியுள்ள 7 க்கும் விடைகள் கண்டுபிடிக்க. போட்டி சம்பந்தமாக எவ்விஷயத்திலும் எமது தீர்ப்பே முடிவானதாகும். அகராதிகளில் இல்லாத எவ்வார்த்தையும் எமது போட்டியில் விடைகளாய் இருக்காது.

| | | |
|---|---|---|
| 1. | பி—தி | (பிரியம்) |
| 2. | பசா— | (பிசாசு) |
| 3. | தப— | (ஓர் வாத்தியம்) |
| 4. | கெ—வம் | (அகங்காரம்) |
| 5. | நா—தன் | (பரிபாரி) |
| 6. | சுரா—கை | (கங்கை) |
| 7. | —றண்டு | (நகக்கீறு) |
| 8. | தம— | (ஓர் நதி) |
| 9. | மௌ—லி | (காகம்) |

விலாசம்:—

**E. K. J. SARMA,**
**65, B. Paddapukur Road,** *Elgin Road P O.* **CALCUTTA**

சென்ற மாதம் வெளியான போட்டியின் சரியான விடைகள்.

1. அகத்தியர். 4. தாவசி. 7. சவையார்.
2. வடலூர். 5. கபாடம். 8. பூசாரி.
3. அவத்தம். 6. கிராம்பூ. 9. அரன்.

# நவ நாகரீகத் தீர்ப்பு.

(ஆசிரியர், S. சிவனையா.)

(62-ம் பக்கத் தொடர்ச்சி.)

(இடம்-மாஜிஸ்டிரேட் கோர்ட்டு. நேரம்-காலை 11 மணி மாஜிஸ்டிரேட் முன்னிலையில் சோணகிரி, சோமாஸி, கான்ஸ்டேபிள், ஸப் இன்ஸ்பெக்டர், வக்கீல்கள், கேஸ் கட்டுகளுடன் ஹெட் கிளர்க் ஆகிய இவர்கள் ஆஜர்.)

மாஜிஸ்டிரேட்:— சோணகிரி!

சோணகிரி:— எஜமானே ஆஜர்.

மாஜிஸ்டிரேட்:— நீர் கொஞ்ச நாளைக்கு முன்பு காலை 8-மணிக்கு மெயின் ரோட்டில் சோமாஸியோடு மற்போர் செய்துகொண்டிருந்தது உண்மைதானே?

சோணகிரி:— நான் வேண்டுமென்று செய்யவில்லை.

மாஜிஸ்டிரேட்:— நீ கொள்ளைக் கூட்டத்தில் சேர்ந்து பல ஊர்களிலும் கொள்ளையடித்து வருவது வாஸ்தவமா?

சோணகிரி:— கொள்ளைக் கூட்டத்தார் எப்படியுள்ளவர்களென்பதுகூட எனக்குத் தெரியாதே.

மாஜிஸ்டிரேட்:- சந்தேகத்திற்கான ருசு உன்னுலேயே வெளியானதாகவும், நீ கொள்ளைக் கூட்டத்தைச் சேர்ந்தவனென்பதாக நீயே ஒப்புகொண்டதாகவன்றோ விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டிருக்கிறது.

சோணகிரி:— எஜமானே! அதெல்லாம் எனக்கொன்றும் தெரியாது. காலை 8-மணிக்கு ஓர் அவசரமாக ரோட்டில் போய்க்கொண்டிருந்தபோது எனது நண்பன் சோமாஸி என்னைக் குறுக்கிட்டு 'எங்கு செல்கிறாய்' என வினவினான். இவனிடத்தில் வாய் கொடுத்தால் லேசில் விடமாட்டானென நினைத்து 'காரியத்தை முடித்துக்கொண்டு திரும்பி வந்து சொல்லுகிறேன்' என்று புறப்பட்டேன். 'சொல்லிவிட்டுத்

தான் போகவேண்டும்' என்று என்னை நிர்ப்பந்தித்தான். முடிவில் இருவருக்கும் மல் யுத்தம் ஏற்பட்டது. என் மேனி முழுதும் புழுதியும் சிற்சில இடங்களில் இரத்தக்குறிகளும் இருக்கக்கண்டு 'தலைவிதியே' என வருந்தப்பட்டு நிற்கும் போது இக்கான்ஸ்டேபிள் என்னை ஸ்டேஷனுக்கு அழைத்துச்சென்றார். பின் அங்கிருந்து இங்கு வந்தோம். யான் கொள்ளைக் கூட்டத்தைச் சேர்ந்தவனென்ற கற்பனையைப் புகுத்தினவர் யாரென்று தெரியவில்லை.

எஜமானே! அது கிடக்கட்டும். என்னை உதாசீனமாகப் பேசி ரோட்டில்பலரும்சிரிக்கும்படி சண்டைபோட்ட இந்தப் பயல் செய்த குற்றத்திற்கு என்ன சொல்லுகிறீர்கள்?

மாஜிஸ்டிரேட்:- சரி; நீ என்ன காரியத்திற்காக அவசரமாகச் சென்றுகொண்டிருந்தாய்? அக்காரியம் இன்னதெனத்தெரியாததனாலல்லவோ நீ இங்கு வரவும், கொள்ளைக் கூட்டத்தினரில் நீயுமொருவன் என்பதுமான கற்பனைகள் அடுக்கவும் நேர்ந்தது. அவ்விஷயம் அவ்வளவு பரம ரகசியமா? என்ன?

ஸோணகிரி:- சரி; சரி; எல்லோரும் அந்தப்பயலுக்கே பரிந்து பேசுகிறீர்கள். நான் சென்ற காரியத்தை ஒருவாறு சொல்லிவிடுகிறேன்.

முந்தின இரவில் என் வீட்டிற்கடுத்த வீட்டு அமிர்தகுண தீக்ஷதரின் தகப்பனாரின் வருஷாந்திர திதி நடந்தது அவ்வைபவத்திற்கு எனக்கும் போஜன அழைப்பு வந்திருந்ததினால் யானும் பரம சந்தோஷத்தோடு சென்று போஜன விடுதிக்கு அருகிலேயே உட்கார்ந்து அவர்களால பரிமாறப்பட்ட பதிர்பேணி, ஜிலேபி, லட்டு முதலிய பட்சணங்களையும், பலவித அன்னங்களையும், பலவித பாயசங்களையும் வயிறு புடைக்க உண்டுகளித்தேன். மீண்டும் ஜிலேபியின் மேலிருந்த அவாவால் பட்சணங்கள் வைக்கப்பட்டிருந்த அறைக்குச்சென்று அங்கு மும்முரமாக வேலை பார்த்துக்கொண்டிருந்த வேலாயுத சாஸ்திரியிடம் அவர் மனைவி தேள்கடியால் அவஸ்தைப்படுவதாகவும், அவர் போய் சிகிச்சை செய்து வருமளவும் தான் கவனிப்பதாகவும் சொல்லி அவர் அவ்விடம் விட்டகன்றபின் நான் உட்சென்று ஜிலேபி தட்டைக் காலிசெய்துவிட்டு வீட்டிற்கேகினேன். என் தொந்தி முழு



குறுணிப் பிள்ளையாரெனக் கா
நிமிர்ந்திருந்தது. படுக்கையில் பு.
7-மணிக்கு எழுந்து அவசரமாக
அப்போதுதான் இந்த போக்கியன்
தடுத்து எங்கு போகிறாயென்றான் எ டையகோட்டை)

(கோர்ட்டில் சிரிப்பு மடடு.)

மாஜிஸ்டிரேட்:- கக்கூசுக்குப் போ
வார்த்தை சொல்லிவிட்டுப்போயிருந்தால் செய்யும்

ஸோணகிரி:- அப்படியா நினைக்கிறீர்க
சுருட்டைக்கொளுத்தி, எஸ். ஐ. ஆர். எஞ்ஜின் உண்மை
போல் புகை விட்டுக்கொண்டு, இடுப்பையும்
பன்முறை தட்டிக் குலுக்கி காலை 6 முதல் 10 வ.
கார்த்து இருந்துவிட்டு ஒன்றும்முடியாது 'அப்பாடா' என்று எழுந்திருக்கக்கூடிய அவ்வளவு மலச்சிக்கல் எனக்கு உண்டு என்பது அவனுக்குமுன்பே தெரியும். அவனிடம் இதைக் கூறினால் அவன் வினவுவதற்கெல்லாம் பதில் கூறவேண்டும். தன்னை ஏன் கூப்பிடவில்லை என்று வசை புராணங்கள் கூறி என் மடிபிடிக்கவும் வந்துவிடுவான். இதற்குள் யான் போகும் அவசரம் என்னவாகும்? தாங்களே யோசியுங்கள்.

மாஜிஸ்டிரேட்:- உம்; சரி: ஸோமாஸி! ஸோணகிரி கூறுவது யாவும் உண்மைதானே.

ஸோமாஸி:- எஜமானே! என் நண்பன் கூறியது யாவும் உண்மையே. ஆனால் யான் போஜனப்பிரியனென்பது இவன் அறிந்திருந்தும் என்னிடம் சொல்லாதுபோனது இவன்மீது குற்றமல்லவா? இதைத்தவிர இவன் கொள்ளைக் கூட்டத்தைச்சேர்ந்தவன் அல்ல. நான் இவனைப்பிடிக்க முயற்சிக்கவுமில்லை. தாங்கள் முடிவுசொல்லும் தீர்ப்பை ஒப்புக்கொள்ளுகிறேன்.

மாஜிஸ்டிரேட்:- கான்ஸ்டேபிள் கந்தவேல் ராஜு! நல்ல கேஸ் பிடித்துக்கொண்டு வந்தாய். பேஷ்; ஸோணகிரி! நான் சொல்லும் தீர்ப்பு இருவருக்கும் சம்மதந்தானே.

இருவரும்:- எஜமான் உத்திரவுப்படியே.

மாஜிஸ்டிரேட்:-சரி; ஸோணகிரி தன் ஜோலியின் நிமித்தம் அவசரமாக வெளியே செல்லும்போது ஸோமாஸி அவனைத்தடுத்து நிறுத்தி தொந்தரவு கொடுத்தது சட்ட விரோ

189929.

தான் போகவேண்டும்' என் மில்லாமல் அன்னியர் அவ்விஷ
முடிவில் இருவருக்கும் மல் றமல்லவா. ஆதலால் ஸோமாஸி
முழுதும் புழுதியும் சிற்சில காக ஜிலேபி, வடை, போண்டா,
இருக்கக்கண்டு 'தலைவி தி வகளில் வகைக்கு ஒன்னரை டஜ
போது இக்கான்ஸ்டேபி த்தோடு கூடிய சாப்பாட்டு வகையில்
துச்சென்றார். பின் அ தச் செலவில் ஸோணகிரிக்கு வாங்கிக்
கொள்ளைக் கூட்டத்
புகுத்தினவர் யாரெ து.

எஜமானே! ன் சொந்த நண்பனாயிருந்தும் அவனிடம்
பேசி ரோட்டில்பு ாாது போஜனத்திற்குச் சென்றதும், அவன்
பயல் செய்த கு மபிக்கேட்டும் தான் போகும் காரியத்தைச்
பெருஞ்சச்சரவுக்கு இழுத்துவிட்டதும் ஸோண
மாஜிஸ் ட்டப்படி குற்றமே. ஆகவே ஸோமாஸியால்
சரமாக் த்கப்படும் பட்சணங்களையும். இதர உணவு வகைகளை
யும் ஒன்றும் விடாது சாப்பிட்டு அதனால் ஏற்படும் நன்மை
தீமைகளை ஸோணகிரி அனுபவிக்கவேண்டியது.

இனிமேல் இருவரும் முன்புள்ள சினேகிதப்பான்மையோடு இருந்து எங்கெங்கு சமாராதனை, திதி, திருமணம் நடக்கின்றனவோ அவ்விடங்களுக்கெல்லாம் இருவரும் ஒருவரை ஒருவர் கலந்தே போய்வரவேண்டியது. சரிதானே தீர்ப்பின் முடிவு.

இருவரும்:— எஜமானே மிக்க சந்தோஷம்.

மாஜிஸ்டிரேட்:— எல்லோரும் போகலாம்.

(நவ நாகரீகக் கோட்டு கலைதல்.)

---

# தேவை.

சித்தன் பத்திரிகை விற்பனை செய்யவும், சந்தாதாரர்கள் சேர்க்கவும் முக்கிய நகரங்களுக்கு பொறுப்பும், செல்வாக்குமுள்ள ஏஜண்டுகள் தேவை. தக்க கமிஷன் கொடுக்கப்படும் ஒரு அணா ஸ்டாம்புடன் விண்ணப்பித்துக் கொள்ளவும்.

# தற்கால விவசாயி.

(மு. கா. அம்பலவாணன். இடையகோட்டை)

189929

(பாரதியார்-என்ற மெட்டு.)

ஜீவாதார விவசாயம் செய்யும்
தேசமக்கள் பரிதாபம்
நாவாரச் சொல்லிடில் நோகும் உண்மை
நன்மை பெரிதுமே இல்லை

ஆசையின் துர்ப்பெருக்கத்தால் முன்பு
அடுத்தவன் தோட்டத்தைப்பிடித்து
மோசமதாய்க் கடன் பெருக்கி இன்று
முழிக்கிறார் சிற்சிலர் தாமே.

வெட்டிக்குக்கடனை வாங்கி என்றும்
வரவுக்குமிஞ்சிய செலவை
திட்டமுடனே முன்செய்து இன்று
திணறுகிறார் பெருமூச்சால்

வாய்க்கால் வேலி கிணர்ச்சண்டை சற்று
வலுத்துப் பெருத்ததால் மண்டை
போய்க் கலகம் செய்து பண்டைப்
பொருளைத் தொலைத்தனர் தாமே.

அண்ணனுக்குத்தம்பி பகைமை என்றும்
அடுத்துக் கெடுப்பதில் மோகம்
திண்ணமதாகவே கோர்ட்டில் இன்னும்
செய்த செலவோவனேகம்.

சாமிகோவில்களிற் சண்டை பொல்லாச்
சாதிமதபேதச் சண்டை
நேமமுடன் தொழிலாளி சண்டை
நித்தமும் செய்ததனாலே.

7. ஊருக்குள்ளே பெருங்கக்ஷி சற்றும்
ஒற்றுமை கொஞ்சமுமில்லை
பாருக்குள்ளே வருமானம் செலவு
பற்றவுமில்லை மென்மேலே

8. ஏழைத்தொழிலாளி தம்பாற் கொஞ்சம்
இரக்கம் சற்றேனுமின்றி
தாழவே அவரை அடித்தார் அந்தச்
சாபம் பலித்தது தாமே

9. நூத்துக்குப் பத்துமேவட்டி அன்று
நோட்டெழுதிக் கடன்வாங்கி
எத்துக்குமாத்தாகக் கோர்ட்டில் தாவா
இட்டதனால் பெருநஷ்டம்

10. பருத்தி புகையிலை விலைகள் இன்று
பாதிக்குப்பாதியே யதனால்
பெருத்த கடனுக்கு வட்டி கட்டப்
பின்னமும் வந்ததாமே

11. குடும்பச் செலவுமநேகம் கொண்ட
பெண்டு பிள்ளைகளனேகம்
இடும்புகள் பேசிடும் சுற்றம் மிக
வேச்சுப் பேச்சுகளதிகம்

12. சர்க்கார் நிலவரிகட்ட கொஞ்சம்
தயக்கத்தாலேற்பட்ட
மிக்கவதிகாரி கொட்ட அவர்
வேதனைப்பட்டவநேகம்

13. உண்டுகொழுத்த நன்பனைவி அன்று
ஊதாரிசெய்ததம் பிள்ளை
பண்டைய மேன்மையைநினைத்து உள்ளம்
பதருகிறார் மென்மேலே

14. பயிர்த்தொழில் செய்வதற்கெருவும் இன்று
பற்றியுழுதற்கு மாடும்
அயற்கியாய்ப் போனதால் உழவும் நன்றாய்
ஆக்கங் கொடுக்கலைதாமே.

# தெலுங்குமொழிப்புலவர் பெருமக்கள்.

(கோவை, திரு சி. கு நாராயணசாமி முதலியார்)

(85-ம் பக்கத் தொடர்ச்சி.)

## III. கோனபுத்தா ரெட்டி.

இப்பெயரிய புலவர் 'ரெட்டியார்' என்னும் மரபினில் அம்மரபு செய்தவப்பயனாகத் தோன்றிய பெரியாராவர். இவர் யாவரும் பரவும் மேவரும் சிறப்புடனும், மிகுதியான புகழுடனும் கி. பி. 13-ம் நூற்றாண்டில் ஆந்திர நாட்டில் விளங்கியிருந்தனர். சீரும் செல்வமும் மிக்க இப்பெரியார் திரண்ட செல்வத்திற்குத் தாம் அதிகாரியாயிருந்தும், அதனில் ஆசை கொள்ளாமல் அது நிலையற்றது; இன்றிருந்து நாளை நம்மைவிட்டுச் சொல்லாமல் நீங்கக் கூடியது; பலவித துன்பத்திற்கு நம்மை ஆளாக்கக்கூடியது. ஆனதால், அச்செல்வத்தில் பற்றுவைப்பதைவிட, பரமபத நாதனின் பாததாமரைகளில் பதிந்த மனமுடையராயிருப்பது பல்விதத்திலும் மேன்மையானது, என எண்ணி ஆதிமுதல்வனாகிய அவ்விறைவனை இனிமைமிக்க பாமாலைகளால் அலங்கரித்து அவன் பரந்தமெய்ப்புகழைப் பலபடியாகக் கூறிப்போற்றித் துதிப்பதெனத் தம்மனத்துள் தீர்மானித்துத் தாம் வழிபடும் கடவுளும், தமது ஆன்மநாயகனும், காவிரி, கோள்ளிடம் என்னும் இரு பேராறுகளின் நடுவில் பாம்பணையில் பள்ளிகொண்டருள்பவருமான ஸ்ரீரேங்கநாதனைப் பாட்டுடைத் தலைவனாகக்கொண்டு அவனது திருப்பெயரால் ஸ்ரீ இரங்கநாத ராமாயணம் என்ற அரியதொரு நூலைத் தெலுங்குமொழியில் அழகுபெறஇயற்றினர். இதனை இப்பொழுது ஆந்திரநாட்டினர் த்விவபதராமாயணம் என்று வழங்குகின்றனர். த்வி என்பதற்குவடமொழியில் இரண்டு என்றும்; பதம் என்பதற்குச் சொல் என்றும் பொருள். இவ்விரண்டுங் கூட்டினால் இருச்சொல்என்று பொருளாகின்றது.

இவ்விருச்சொல்லுடன் இராமாயணத்தையும் கூட்டினால் இருச்சொல் ராமாயணம்என்று திரண்ட பொருளாகின்றது. தமிழிலுள்ள இருச்சொல் அலங்காரம், முச்சொல் அலங்காரம் என்ற நூல்களை இதற்கு உதாரணமாகக்கொள்க. இப்பெயரில் இராமாயணத்தை ரெட்டியார் இயற்றியிருக்க, உண்மையுணராத சிலர் இருச்சொல் ராமாயணத்தை இரங்கநாதன் என்ற பெயருடைய அந்தணப்புலவர் ஒருவர் இயற்றினார் எனக்கூறுகின்றனர்.

இதற்கு ஆதாரமாக அவர்கள் மூன்று ஆதாரங்களைக் காட்டுகின்றனர். அவை:-(1) த்விபத இராமாயணம், 'இரங்கநாத ராமாயணம்' என்றுவாடிக்கையில் இருப்பது; (2) வித்துவான்கள், ஆத்மஸ்துதிபாராயணர்கள் (பாராயணர்—நியமமாகக் கற்போர்) என்றும், இவ்விருச்சொல் ராமாயணத்தில் கோனபுத்தாரெட்டியின் தோத்திரம் உள்ளதென்றும், ஆனதால் நூலைஇயற்றியவர் ரங்கநாதகவியே என்பது; (3) சைவப்புலவர்களின் செல்வாக்குத்தாழ்ந்து, வைணவப்புலவர்களின் உயர்வு மேலோங்கி விளங்கும் காலத்தில், அரசனுடைய உதவி அவசியமானதால், அப்பொழுது கோனபுத்தாரெட்டி அரசனாக இருந்ததால், அவனது பெயர் நூலுள் குறித்தது உபசார வழக்கத்தின் பொருட்டென்பது. இனி இம்மூன்று விஷயத்தையும் நாம் நடுநின்று ஆராய்வோம்.

I. சிறு காவியம் ஒன்றை புலமைமிக்க புலவரொருவர் எழுத அதனைச் செல்வாக்கும், அதிகாரமுமுடைய மற்றொருவர் இயற்றினாரெனக் கூறுவது பொருத்தமுமல்ல; சிறப்புமாகாது. தெலுங்குமொழியில் வழங்கப்படுகின்ற சாடுபத்தியங்கள் என்ற ஒருவகைக்கவிகளை எதோ ஒரு ஸ்ரீநாதன், எதோ ஒரு தெனாலி இராமகிருஷ்ணன் எழுதியதாகக்கூறின் நம்பக்கூடுமா? பாஸ்கர ராமாயணம் என்ற ஆந்திரநூலில் ஆசிரியர் பாஸ்கரன் என்று காணப்படுகின்றதே. இதேபோல் வசனவடிவில் எழுதப்பட்ட பால-கிஷ்கிந்தா-சுந்தர காண்டங்களை மல்லிகார்ச்சுன பட்டர் என்பவராலும், அயோத்யா காண்டம், குமார ருத்திரதேவர் என்பவராலும், ஆரண்ய காண்டம் பாஸ்கரன் என்ற வேறொரு புலவராலும், யுத்தகாண்டம், யுளக்கிபாஸ்கரன் என்ற மற்றொரு புலவராலும் இயற்றப்பட்டதென்று தெளிவாகக் கூறப்பட்டிருக்



கிறது. இவ்வுதாரணங்களிருக்கக் கோனபுத்தாரெட்டியார் இயற்றிய இருச்சொல் இராமாயணத்தை இரங்கநாதகவி இயற்றினாரென ஸ்ரீமான் வீரேசலிங்கம்பந்துலு அவர்கள் கூறுவது நம்பக்கூடியதன்று. தெனாலி இராமகிருஷ்ண கவியே விஜயம் என்ற ஆந்திர மொழி நூலின் ஆசிரியர் என்று தெலுங்குமக்கள் ஒருங்கே கூறுவதை வீரேசலிங்கம் பந்துலு ஒருவர் மட்டும் அல்லவென்று கூறினால் ஒப்புவர் யாவர்? இவரே மற்றோரிடத்தில் இரங்கநாதகவியே பொருளுக்கு ஆசைப்பட்டு இன்னொருவர் பெயரை அந்நூலுக்கு வைத்தனர் என்றும் கூறியிருக்கின்றனர். 'இரங்கநாதன்' என்பவர் துபாடு என்ற தாலூகா (ஆந்திரநாட்டிலுள்ளதோர் பிரதேசம்) வுக்கு அதிகாரியாக விளங்கியிருந்தவர். அவரே பொருளுக்கு ஆசைப்பட்டுத் தன்பெயரை விற்றாரென்றால் அதனை எவ்வாறு நம்புவது?

II. புலவர்கள் ஆத்மஸ்துதிபாராயணர்கள் என்ற இரண்டாவது விஷயத்திற்கு ஆதாரமில்லை. ஸ்ரீ வீரேசலிங்கம் பந்துலு அவர்களே நன்னயசோழகவி ஆத்மஸ்துதி செய்திருக்கின்றனர் என்பதைத் தாமே ஒப்புக்கொண்டும் இருக்கின்றனர். புலவர்கள் ஆத்மஸ்துதி செய்வது குற்றமாகாது என்று ஆந்திர நூல்களில் பல இடங்களில் சாமாதானம் கூறப்பட்டிருக்கிறது.

III. வைணவ நூல்களுள் பகவத்கீதை, நிர்வசனோத்தரராமாயணம், இராகவபாண்டீயம் ஆகிய நூல்களில தம் பெயரை நிலைநாட்டுவதில் அதிகாரம் பெற்கொள்ளாத இரங்கநாதர் அவர்கள் இருச்சொல் இராமாயணத்தில் மட்டும் தம் பெயரை நிலைகொளச்செய்வதில அதிகாரம் பெற்கொண்டாரென்றல் நியாய முறைக்கு எற்றதாயில்லை.

ஆயின், இருச்சொல் இராமாயணத்தை இரங்கநாதன் என்னும் பிரபுவே இயற்றினாரென்று ஆந்திர மக்களில் பெரும்பாலோர் கருதுகின்றார்களெனின், கோன புத்தா ரெட்டியார் பெயர் அவர் பெருஞ்செல்வரும், பிரபுவுமாயிருந்த காரணத்தால் புலவர்களோடு வைத்து எண்ணப்படாமல் விட்டதே அவர் பெயர் பிரசித்தப்படாமற் போனதற்கு நேரிய காரணமேயன்றிப் பிறிதன்று.

வழக்கத்தைப் பின்பற்றியும், பலவிதமான காரணங்களைக்கொண்டும், ஒருவரைச் சுபாலங்கருதியும் கோனபுத்தா

ரெட்டியாரவர்களின் ஆசிரியப்பதவியை விலக்கி இரங்கநாத கவியின் பெயரை நிலைச்செய்யவேண்டுமென்ற ஒரு வகைச் சூழ்ச்சியேயாமென்பது நமதபிப்ராயம். இருச்சொல் இராமாயண நூலின் ஆசிரியர் கோனபுத்தாரெட்டியேயாவர்.

இனி, நமது ரெட்டியார் தமது ராமாயணத்தில் செய்துள்ள அவசியமான சில சீர்திருத்தங்களைச்சிறிது கூறி இவ்வரலாற்றை முடிப்பாம்.

கோனபுத்தாரெட்டியார் தமது நூலில் ஆந்திரமொழியின் உயர்வையும், ஆந்திர ஜாதீயங்களையும், நல்லோர் கூட்டங்களின் நலத்தையும் விரிவாக ஆராய்ந்து யாவரும் ஒப்புமுறையில் விளக்கியிருப்பது முக்கியாம்சம் என்றே கூறவேண்டும். மற்றும் கதையின் விஷயத்திலுங்கூட இவர் வடமொழி சிரேஷ்டராகிய வான்மீக முனிவரைப் பின்பற்றாமல், தம்மிச்சை வழியை மேற்கொண்டிருப்பதைக் கவனித்தால் ரெட்டியார் தாய்ப்பாஷையாகிய தெலுங்குமொழியை மிகுதியாகப்பெருக்குவதில் இடைவிடாத முயற்சியை மேற்கொண்டிருந்தாரென்பது தெளிவாகப்புலனாகின்றது. இராமாயணக் கதை பாரதநாட்டில் நாற்றிசைகளிலும் பல்வேறு விதமாக வழங்கப்பட்டு வருகின்றதென்ற செய்தி யாவருமறிந்ததே. இவர் அவைகளையும் ஆந்திரநாடுகளில் வாடிக்கையிலுள்ள கதைகளையும் தன்மனதில் பதிந்துகொண்டு, வான்மீக முனிவரது இராமாயணத்தைச் சிற்சில இடங்களில் தழுவியும், கதாசந்தர்ப்பத்தைப் பின்பற்றியும் தாம் இயற்றத்தொடங்கிய இருசொல் இராமாயணத்தை அழகும் இனிமையும்பெற விசைத்தனராவர். இவ்வளவே இப்புலவரைப்பற்றி நாம் அறிந்தவை. (தொடரும்)

---

**ஸ்ரீ பழனியாண்டவர் தாயத்து**

அன்பர்கள் மனக்கவலைகளை நீக்கி, சரீர சௌக்யம், ஆயுள் விர்த்தி, சந்தான பாக்யம் உண்டாக்கும்.

தாயத்து 1-க்கு ரூ. 1—4—0.

ஸ்பெஷல் தாயத்து சார்ஜ் வேறு.

S.V. ராஜப்பா, மலைக்கோவில் மிரஸ், பழனி. S.I

ஏஜண்டுகள் தேவை

**"ஜகன் மோகினி"**

ஆசிரியை: வை. மு. கோதைநாயகி அம்மாள்.

13-வது ஆண்டு | மாதாந்த நாவல் சஞ்சிகை. | ஜனவரி 1936

இந்த ஆண்டில், அநேக அநுபவ நீதி சாரங்களுடன் கூடிய இன்பஜோதி அல்லது பிள்ளைவீட்டாரின் கோளை என்னும்நவரஸந்ததும்பிய துப்பறியும்நாவலாரம்பமாகிறது

வருஷசந்தா ரூ 1-8-0. | ஜீவிய சந்தா ரூ. 25. | தனிப்பிரதி அணா 2.

ஜீவிய சந்தா நேயர்களுக்கு இனாம்!

இனிமேல் நமது நூலாசிரியையால் எழுதப்பட்டு, நம்மால் பிரசுரிக்கப்படும்எல்லாநாவல்களும் இனாமாக அளிக்கப்படும்.

"ஜகன்மோகினி" ஆபீஸ்,
திருவல்லிக்கேணி, சென்னை.

---

**"செங்குந்த மித்திரன்"**

(ஓர் உயரிய மாதாந்த வெளியீடு.)

அரிய ஆராய்ச்சிக் கட்டுரைகள். அரசியல் அனுபவக் குறிப்புகள், உலக விநோதங்கள், விகடத் துணுக்குகள், சிறு கதைகள் நிறைந்து விளங்குவது.

வருட சந்தா.
உள்நாடு ரூ. 1—8—0.
வெளிநாடு ரூ. 2—0—0.

செங்குந்த மித்திரன் ஆபீஸ்,
138, பவளக்காரத்தெரு, சென்னை.

# கஸ்டம்ஸின் தேட்டை.

(புதுவை, R. S. ராஜலக்ஷ்மி.)

சென்றமாத சித்தனில் பலே! எஸ். ஐ. ஆர்! என்ற தலைப்பின்கீழ் வெளிவந்த கட்டுரையைப் படிக்கும்போதே தென்னிந்திய சுற்றுப்பிரயாணம் என் கண்முன் தோன்றியது. ஏனெனில் நானும் அந்த (12½) பன்ரண்டரை ரூபாய் போட்டியில் கலந்துகொண்டேன். நிற்க,

இந்தப் போட்டியினால் எஸ். ஐ. ஆர். மட்டுமின்றி இங்கிலீஷ் கஸ்டம்ஸ் ஆபீசிற்கும் நல்லவேட்டை. பூவோடு சேர்ந்த நாரும் மணம் பெற்றது போல ரயில்வேக்காரர்களால் இவர்களும் ஏராளமான லாபம் அடைந்தார்கள். பணமாகவும், துணிகளாகவும், பொருள்களாகவும் பலவிதமாய் சம்பாதித்தது கணக்கிலடங்கா.

புதுச்சேரி என்றால், கருப்போ, வெளுப்போ என்று பார்த்திராத பேர்களெல்லாம் இதுதான் சமயமென்று இந்த பனிரெண்டரை ரூபாய் போட்டியில் வந்து சேர்ந்தார்கள். வந்து திரும்பிப் போகும்போதல்லவோ தெரியப்போகிறது? அதிலும் புதுச்சேரி சில்க்கு என்றால் ஜனங்களுக்கு ஒரு புதுமோகம். இந்த ஆசையே முக்காலும் பிரயாணிகளை கழுத்தைப்பிடித்து தள்ளிக்கொண்டு புதுச்சேரிக்கு வருகிறதென்றால் அதைப்பற்றித் தெரிவிப்பது அவசியமில்லையல்லவா? அதுவும் பெண்டுபிள்ளைகளுடன் வந்திருந்தோரெல்லாம் தங்களுக்கு வருஷக்கணக்காய் தேவையான உடைகளை சில்க்கு மயமாகவே வாங்கி, கத்துப்புத்திரர்களாகிய (கஸ்டம்ஸ்) தீர்வைச்சாவடியாரிடம் ஒப்படைத்து விட்டுச் சென்றார்கள். அதுவும் கொஞ்சம் உருட்டு மிரட்டு தெரியாதவர்களாயிருந்தால் அவர்கள் அப்படியே அபேஸ்தான். புதுச்சேரியிலிருந்து புறப்படும் ட்ரெயின் (கண்டமங்கலம்) சின்னபாபு சமுத்திரம் என்ற ஸ்டேஷனில் நின்றவுடன்





எல்லோரும் அங்கே இறங்கவேண்டும். அப்படிச் செய்யாதவர்களை உடனே ஒரு சிப்பாய் வந்து இறக்கிவிடுவான். பின்பு பெண்மக்கள் தனியாகவும் ஆண் மக்கள் தனியாகவுமாய் தகரக் கொட்டகை ஜெயிலுக்குள் (சோதனையிடம்) செல்லவேண்டும். அங்கு ஒவ்வொருவராய் சோதிக்கப்படுவார்கள். கட்டியிருக்கும் உடைகள் புதிய சில்க்காயிருந்தால் மதிப்பு விலையில் பாதிதீர்வை கொடுக்கவேண்டும். இல்லையேல் பறிமுதல் செய்துவிடுவார்கள். பிரெஞ்சிந்தியாவிலன்றி, பிரிட்டிஷ் எல்லையில் வாங்கியிருந்தார்களானால் வரும்பொழுது மேற்சொன்ன சின்னபாபுசமுத்திரமென்ற ஸ்டேஷனில இறங்கி தங்கள் சாமான்களைக்காட்டி ரசீது பெற்றுக்கொள்ளவேண்டும். அப்படிச் செய்யாவிட்டால் அவைகள் புதுச்சேரியிலிருந்து வாங்கினதாகவே கருதப்படும்.

இப்படித் தீர்வை கட்டியோ அல்லது தாரைவார்த்துவிட்டோ அவரவர்கள் அந்தஸ்தைக் காப்பாற்றிக்கொள்ள போதிருந்துவிடுவார்கள். பிறகு ஒரு அரைமணி நேரம் வரை சிறைவாசந்தான். அந்தச்சமயத்தில் அரசியல்வாதியாயிருந்தாலும் சரி, தேசிய வாதியாயிருந்தாலும் சரி, ஜஸ்டிஸ் கக்ஷியாயிருந்தாலும் சரி, ஆஸ்திகரானாலும் நாஸ்திகரானாலும் சரி எல்லாக்கக்ஷியினரையும் ஒரே சமமான கைதிகளாக பாவிக்குமிடம் அது ஒன்றுதான். எதற்காக இப்படி ஜனங்களை (பட்டியில்) அடைக்கிறார்களென்றால், பிரயாணிகளை சோதிக்கையில் ட்ரெயினை சோதிப்பார்கள். அந்த வேலை முடிகிறவரைக்கும் சிறைவாசம் அனுபவிக்கத்தான் வேண்டும். உதாரணமாக இந்த எஸ். ஐ. ஆர். சுற்றுப்பிரயாணத்தில் அநேகர் புதுச்சேரிக்கு வந்து இந்த முறை அறியாமல் தங்கள் பொருள்களைப் பறிகொடுத்தார்கள். பிரெஞ்சு எல்லையிலிருந்து இங்கிலீஷ் எல்லை வரைக்கும் காடு, மேடு முதலிய இடங்களெல்லாம் கஸ்டம்ஸின் அட்டகாசந்தான். ரயில் மார்க்கம் மாத்திரமல்ல, லேவு, பஸ், வண்டி, சைக்கிள், கால்நடை முதலிய மார்க்கங்களிலும் இவர்களுடைய தர்பார் நடைபெற்றுக் கொண்டேயிருக்கும்.

இந்த புதுச்சேரியில் கிடைக்கும் ஜப்பான் சில்க்கு மற்ற இடங்களில் கிடைக்காதா என்ன? ஆனால் ஒரு ரகசியம். இங்கே கிடைப்பதுபோல் இறப்போனதும, நாள்பட

உழைக்காததுமான சில்க்குகள் மற்ற ஊர்களில் கிடைக்குமோவென்பதுதான் சந்தேகம். இதிலிருந்து பொதுவாக எல்லோரும் தெரிந்துகொள்ளவேண்டுவது என்னவென்றால் புதுவையைக்காண ஆவலுற்றவர்கள் திரும்பி போகையில் கஸ்டம்ஸ்உத்தியோகஸ்தர்கள்கேட்கும் லாபாயிண்டுகளுக்கு சரியான விடையளிக்கத் தெரிந்திருக்க வேண்டுமென்பதே. பெப்பெப்பே என்று விழிக்கக்கூடாது.

புதுச்சேரிவாசிகள் மட்டும் ஒருவர் உபயோகத்துக்குத் தேவையான எதுவும் கொண்டுபோகலாம் என்று சட்டம் செய்யப்பட்டிருக்கிறது. இதனால் மற்றவர்களும் அவ்வூர் வாசிகள் தானென்று சொல்லித் தப்பித்துவிடலாம் என்றெண்ணி அங்கு ஏமாந்து பறிகொடுக்கிறார்கள். எஸ்.ஐ.ஆர். கம்பெனியாரின் உதவியால் இவ்வருடம் இங்கிலீஷ் கஸ்டம்ஸார் அடைந்திருக்கும் லாபம் ஏராளமானது. இந்தப்பணமெல்லாம் யாருடையது? பொதுமக்களுடையதே. பலபேர்கள் வயிறெரிய அடைந்த லாபம்.

புதுச்சேரி வாசிகளென்றும், வெளியூர் வாசிகளென்றும் அவர்களுக்கு எப்படித்தெரியுமென்று வாசகர்கள் ஐயுறலாம். உண்மைதான், எங்களூர் கஸ்டம்ஸ் புலிகளுடன் நீங்கள் ஒரே நிமிஷம் சம்பாஷித்தீர்களானால் இந்தச்சந்தேகமே ஏற்பட்டிராது. முக்கியமாக அவர்கள் கேட்கும் கேள்வியும் அதற்கு ஒரு பிரயாணி கொடுத்த பதிலையும் கீழே காண்க.

கஸ்டம்ஸ் உத்தியோகஸ்தர்:- சார்! நீங்கள் எந்த ஊர்?

பிரயாணி:- புதுச்சேரி.

கஸ்டம்ஸ் உத்தியோகஸ்தர்:- எந்த தெரு? என்ன உத்தியோகம்?

பிரயாணி பதில் கூறமுடியாது விழிக்கிறார்.

சரி; உங்களிடமிருக்கும் இந்த சில்க்துகளுக்கு ஒன்றுக்குப்பாதி தீர்வை கட்டவேண்டும். (அதுவும் முதலிலேயே காண்பித்துவிட்டால்தான் இந்த நிபந்தனை. முதலில் ஒன்றுமில்லையென்று சொல்லி பிறகு காண்பித்தால் முழுதும் பறிமுதல்) மற்றொரு பிரயாணி சில்க்குமயமாக காணப்படுகிறாரென்று வைத்துக்கொள்வோம். அவர் கொடுக்கும் பதிலைப்பாருங்கள்.



கேள்வி:- நீங்கள் பாண்டியா?

பதில்:- ஆம்.

கேள்வி:- நீங்கள் எங்கிருப்பது? உமது வேலை என்ன?

பதில்:- ஓ! தெரியாதா? வசிப்பது மிஷின் தெருவில். வேலை ராலி ஆபீசில்.

அப்படியா? மெட்ராஸ் போகிறீர்களா? போய் வாருங்கள்; ரொம்ப தாங்ஸ்.

பார்த்தீர்களா புதுச்சேரிக்குள்ள மதிப்பை. விஷயமெல்லாம் பேச்சில்தானிருக்கிறது.

சமீபத்தில் கொழும்பிலிருந்து ஞானமணி என்றொரு நண்பர் புதுவை எப்படிப்பட்ட ஊரென்றும், என்ன சௌகரியமென்றும் எனக்கு எழுதிக் கேட்டிருந்தார். நமது சித்தன் வாயிலாய்த் தெரிவித்திருக்கும் இந்த விஷயங்களை எல்லாம் அந்நண்பர் தெரிந்துகொள்வாராக.

---

"லோகோபகாரி".

பழமையும், புதுமையும் கொண்ட

வாரப்பத்திரிகை.

42-ம் ஆண்டு நடக்கிறது.

இனிய கதைகள், தேசீய பாடல்கள், ஆராய்ச்சிக் கட்டுரைகள், உலக அதிசயங்கள் முதலியன கொண்டு இனிய எளிய செந்தமிழில் எழுதப்பட்ட செய்தித் துணுக்குகள் பொதிந்து வெளிவருகின்றன.

இன்றே சந்தாதாரராய்ச் சேருங்கள்.

வருட சந்தா ரூ. 4—0—0.

"லோகோபகாரி,"

சிந்தாத்திரிப்பேட்டை, சென்னை.

# மாதர் பகுதி.

## சாரதா சட்டம்.

( தோழர், A. B. ஆதித்தர். )

சாரதா சட்டமானது 1930-வருடத்திலேயே இந்தியா சட்டசபையில் நிறைவேற்றப்பட்டுள்ளது. இச் சட்டமானது சரியாக அநுஷ்டிக்கப்பட்டால் பெண்மக்கள் தேக அசௌக்யமில்லாது கல்விகற்க வசதிகளுண்டாகும். 12-வயதுப்பெண்குழந்தை மற்றொரு குழந்தையைப்பெறுவதென்று பிரசவவேதனைப்பட்டு மரணமடையவேண்டியதுமில்லை. மரணமடையாது பிரசவித்தாலும் கஷ்டத்துடனும், களைப்புடனும் கண் குழிவிழுந்து, உடற்கட்டு தளர்ந்து, பரிதாபமாய், பலஹீனமாய், ஏக்கமுடன் உயிருள்ள பிண உருவாய் உலகில் உலாவவேண்டுமென்ற நிர்ப்பந்தமில்லை. வாழ்க்கைப்பட்ட குடும்பத்தில் ஒன்றும் தெரியாது, அடி உதை வாங்கிக்கொண்டு, மூலையிலிருந்துகொண்டு, தன்னை நொந்து தலைவிதியென்றுசொல்லி நினைந்து நினைந்து அழவேண்டியதில்லை. மனிதனது, தன்மையற்ற—அற்ப சரீர சுகத்தின் ஆசைச்செய்கைக்கு—மிருகவேட்கையுள்ள பலவந்த வேட்டைக்கு அஞ்சி தாயகத்துக்கு ஓடிவரும் அனியாயமில்லை. இன்பச்சுவையின்றி வம்புச்சுவைக்காளாகி, அல்லல்-தொல்லை படவேண்டிய அவசியமில்லை. வாழ்க்கையில் வெறுப்புற்றுக் குளம் குட்டைகளில் விழுந்து உயிர் துறக்க வேண்டியதில்லை.

சாரதா சட்டத்தால்பெண்களுக்கு க்ஷேமகாலம் பிறந்துவிட்டது! இளமையில் கல்விகற்றுக் கண்யமுடன் காலங்கழிக்கலாம். சரீரத்தின் உறுப்புகள், எலும்புகள் நன்கு பலப்பட்டபின்னர் வாலிபத்தில் மணம் செய்துகொள்ளலாம். கற்றகல்வியின் பயனாய் குடும்பத்தை ஒழுங்காகநடத்தலாம். இன்பத்திலும், துன்பத்திலும் வாழ்க்கையைச் செம்மையாகச்சரிவர நடத்தலாம். இகலோகத்தில் கணவனுடன் [illegible]





மாகக்கூடியிருந்து இன்பமுறலாம். வேதனையில்லாது-பிராணஹானியில்லாது சுகப்பிரசவம் கொள்ளலாம். அறிவுடன், பக்களை ஒழுங்காக வளர்த்து வீரத்தலைவர்களை உண்டு செய்யலாம்.

இத்தகைய பல நன்மைகள் சாரதா சட்டத்தைக் கண்டிப்பாய் நடத்திவைப்பதால வரப்போகிறது. இதனைப் பாழும் வைதீகர்களில் சிலர் எதிர்க்கின்றனர். பால்ய விவாகம் முகம்மதிய அரசாக்ஷியிலிருந்தே ஆரம்பித்து வழக்கமாய் இருக்கவேண்டுமென யூகத்துக்குளட்டி நிற்கின்றது. கோஷா வழக்கமும் அக்காலத்திலேயே அதிகமாகப் பரவியதாகத் தெரிகின்றது. யுத்தம் என்ற பேரைக்கேட்டமாத்திரத்தில் நடுங்கக்கூடிய பார்ப்பனர்கள் முகம்மதிய வீரர்களுக்குப் பயந்து தங்கள் பெண் குழந்தைகளைப் பாலியத்திலேயே பாணிக்கிரகணம் செய்துகொடுத்தனர். முகம்மதியர் காலத்துக்கு முன்னே எங்கே பால்ய மணம்? ஒன்றுண்டா? இல்லை, இல்லை.

காலம் போகப்போக குழந்தை மணத்தால்வரதக்ஷிணை என்றொரு வழக்கமும் வந்தது. இந்தவழக்கத்தால் அந்தோ! பிராமணர்களும், அவர்களைப் பின்பற்றுவோரும் குடிகெடுகின்றனர். வரதக்ஷிணையின் கொடுமையால் வயது பதினறுவந்ததும் இரண்டு மூன்று வருஷத்துக்குமுன்னரே அந்தப்பெண் புஷ்பவதியாகி இருக்கும், பெற்றோர்கள் அவளின் வயதைக் குறைத்துக்கூறி, புஷ்பவதியாகவில்லை என்று பொய் சொல்லி மறைத்துவைப்பதோடு அப்பெண்ணுக்காக கடன்பட்டு வறுமையுறுகின்றனர்.

இருபது வயது வாலிபன் அதிக வரதக்ஷிணை கேட்பதால் வரதக்ஷிணை கொடுக்க வழியின்றி எட்டு வயதுப்பாலிகையை எண்பது வயது வயோதிகனுக்கு வதுவை செய்கின்றனர். கொடுக்கும் பெற்றோர்களும் கொஞ்சமாவது யோக்யப்பொறுப்பின்றி கட்டிக்கொடுத்துவிடுகின்றனர். அதற்குமுன் எத்தனை தாரங்களிருந்தாலும், இருந்து இறந்தாலும் கிழவனும் மகிழ்வுடன் குழந்தையை மணம் செய்துகொள்கிறான். இதென்ன அநியாயம்? இந்த அநியாயம் புண்ணிய பூமி என்று போற்றப்படுகிற இந்திய நாட்டிலன்றி வேறு எந்த நாட்டிலுமில்லை.

குழந்தை என்ன சுகத்தை அறியப்போகின்றாள்? இரண்டொரு வருடத்துள் அவளுக்காவது கணவனுக்காவது மரணம் சம்பவிக்கின்றது. அவள் இறந்துபோனால் கிழவன் மறுமணம் செய்துகொள்கிறான். அவனுக்குப் பெண் கொடுக்க மக்களும் (மாக்களும்) தயாராயிருக்கின்றனர்.

அவன் இறந்துபோனால் பத்துவயதுக் குழந்தை விதவையென்று சொல்லப்படுகின்றாள். அவள் நல்ல ஆடை ஆபரணங்கள் அணியக்கூடாது. புஷ்ப வாசனைகள் முகரக் கூடாது. சுப காரியங்களில்—நாலு பேர் கூடிய இடங்களில் அவள் கலந்துகொள்ளக் கூடாது. ஒரு வெள்ளைப் புடவையைக் கட்டிக்கொண்டு அவள் மூலையில் இருக்கவேண்டும். அவளுக்கு நல்ல உணவில்லை; உதவி இல்லை. அந்நிய ஆடவன் அவளைத்தொட்டுத் தலையைச் சிரைத்து மொட்டையாக வைககவேண்டும். இவ்வளவுக்கும் அவள் செய்த குற்றம் ஒன்றும் இல்லை. ஒன்றும் அறியாத குழந்தை—சிறுமி விதவை என்று சொல்லி, இவ்வாறு அலங்கோலப்படுத்தப்படுகிறாள்.

யார் என்ன சொன்னாலும் இயற்கையான பருவ காலம் அவளை விட்டு விடுமா? அது தன் வேலையை ஒழுங்காகவே நடத்திக்கொண்டே இருக்கின்றது. வயதேறவும் குறித்த ஒரே நாளில் புஷ்பவதி ஆகின்றாள். எனினும், எவர்மீதும் அவள் காதல் கொள்ளக்கூடாது. அதுதான் சட்டம். கொண்ட காதலை அவள் தன் மனதிலேயே புதைத்துக் கொள்ளவேண்டும். காதலைத்தான் புதைத்துக்கொண்டாள்; கொண்ட காமத்தையும் அவளால் என்னசெய்ய முடியும்? அது எல்லோராலும் பொறுத்துக்கொள்ளக் கூடியதா? அடக்க முடியாத காமம், சினிமாப்படக்காட்சி போன்று தோன்றி மறைவதில்லையா? ஒரு நாளா? இரு நாளா—எத்தனை நாள் பொறுத்திருப்பாள்? பகிரங்கமாக விதவைகளை மணம் செய்துகொள்ள மனமொப்பாத கள்ளக்காளைகள் அந்தரங்கமாக அவர்களுடன் சுகித்துக்கொள்ளக் காத்திருக்கின்றனர். அது அவளுக்குத் தெரியும்.

குன்றிடைப்பிறந்த தென்றலாலும், நல்ல நிலா ஒளியாலும், பின் ஜாம வேளைப் பாதுகாப்பாலும் பொறுக்கமுடியாது வேறு வகை [illegible]



இவ்வாறு பலநாள் பலமுறை நடந்துவிடுகிறது. வயிறு வளர்ந்துவிடுகிறது. இனி நடப்பது என்ன? ஒன்று சிசுக்கொலை; அல்லது தற்கொலை.

பெண்மணியின் வாழ்நாள் முடிவுற்றது. கடவுள்கள் அவதாரம் செய்ததும், தர்மதேவதைகள் நடனம்புரிவதும், கற்பரசிகள் நிறைந்ததுமென்று பலவகையாகப் புகழப்படும் நாட்டில், எந்நாட்டிலும் கேள்விப்படாத கொடுமைகள் இவ்வாறு நடக்கின்றன. அதிலும் உயர்ஜாதி என்று கூறப்படும் வகுப்பிலேயும் இவ்வாறெல்லாம் நடந்துவருகிறது.

இதுகாறும் நாம் கூறிய தீங்குகளை எல்லாம் நீக்குவது திரு. சாரதா அவர்களின் சட்டமாகும். இச்சட்டத்தைப் பார்த்து சில வைதீகர்கள் 'மதம் போச்சு, மதம் போச்சு' என்று கூச்சலிடுகின்றனர். பிரிட்டிஷ் இந்தியா நீங்கலாக உள்ள சுதேச சமஸ்தானங்களில் போய் பால்ய மணம் செய்கின்றனர். இதென்ன மடமை? "எந்த மதத்திலும் இல்லாத உண்மைகள் இந்து மதத்தில் உண்டு" என்று இந்த வைதீகர்கள் சொல்லிக்கொள்வது உண்டு. அது இவ்வித உண்மைகள்தான்போலும்! தவறான வழியில கல்யாணம் செய்வதும், காடாத்திக் கல்லெடுப்பதுவுமே இந்து மதமானால் நடைமுறையிலுள்ள அப்படிப்பட்ட இந்து மதம் அவசியம் அழிந்துதான் தீரவேண்டும்.

சாரதா சட்டம் மதத்தில் தலையிடுவதாகவும், மதத்தை பாதிக்கும் இச்சட்டத்தை ரத்து செய்யவேண்டுமென்றும் சில வைதீகக்குடுக்கைகள் இராஜப்பிரதிநிதி லார்டு இர்வினிடம் தூதுசென்றனர். அவ்வாறு தூதுசென்றவர்களுக்கெல்லாம் அவர் "மதவிஷயத்தில் ஆத்மார்த்திக சுதந்தரத்தை அப்படியே பாதுகாக்கவேண்டுமென்பதில் நீங்கள் காட்டும் ஆர்வத்தில் எனக்குப் பூரண அநுதாபமிருக்கின்றது. ஒவ்வொரு மதத்தினரது நலத்தையும், கோரிக்கைகளையும், அவை ஜனங்களின் பொது நலத்திற்கு முரண் படாதிருக்கும்வரை எனது கவர்மெண்டார் எப்பொழுதும் காப்பாற்றிக்கொள்வார்கள். தற்பொழுதுதோன்றும் சந்தேகங்களுக்காக நான் மிக வருந்துகிறேன். ஆனால் இந்த சந்தேகங்கள்

நாளடைவில் தீர்ந்துவிடுமென நம்புகிறேன். இந்த சட்டமானது பொது நலத்தைப் பெருக்க ஏற்பட்டது. ஜனங்களது ஒழுக்க நலத்தையும், சரீர வன்மையையும் விருத்தி செய்யும் நோக்கத்துடன் கொண்டுவரப்பட்ட இந்தச்சட்டத்தைச் சிலர் எதிர்ப்பது சரியல்ல'' என்று தகுந்த பதில் கூறினர். எனவே, அவர் என்றும் நமது தேசத்தாரின் புகழுக்குப் பெரிதும் உரியவராகின்றார்.

(தொடரும்.)


"லக்ஷ்மி"

ஓர் நவீன மாதப் பத்திரிகை.

ஆராய்ச்சிக் கட்டுரைகள், இனிய கதைகள், ஹாஸ்யம், விகடம், செய்திக்துணுக்குகள், முதலியன நிறைந்தது. எளிய செந்தமிழ். அழகிய அட்டையுடன் கூடியது. அதிகப் பக்கம். குறைந்த சந்தா, ஒவ்வொருவரும் படித்துப் பயன்பெறவேண்டியது.

சந்தா. உள்நாடு ரூ. 1—0—0.
வெளிநாடு ,, 1—8—0.

விபரங்கட்கு கீழ்கண்ட விலாசத்திற்கு எழுதவும்.

மானேஜர் "லக்ஷ்மி" ஆபீஸ்,
திருநெல்வேலி ஜங்ஷன்.


B. N:- சித்தனுக்கு கடிதம் எழுதும் அன்பர்கள் தங்கள் சந்தா நம்பரை தவறாமல் எழுதவேண்டும் நம்பர் குறிக்கப்படாத கடிதங்கள் கவனிக்கப்படமாட்டாது.

# அகத்தியர்
# குணவாகடம் 3000.

(சாமி விருதை, சிவஞான யோகிகள்.

(92-ம் பக்கத்தொடர்ச்சி)

வாதமடா சர்வாங்க வாத மென்றும்
வன்மையுள்ள தொந்த வாத மென்றும்
போதமடா ஒருபக்கம் மட்டுங் கண்டால்
பொலிவான பாரிச வாத மென்றும்
பாதமடா சுவாதீன மில்லா விட்டால்
பரிவான தோரங்க வாத மென்றும்
நாதமடா அசைவற்றுச் சதைகள் கெட்டால்
நலமா னசிர்த வாத மாமே. (126)

ஆமேதான் நேத்திரத்தின் நரம்புக் கப்பா
அப்பனே வாதமது வந்த தானால்
போமேதான் கண்கள் ரெண்டுந் தெரியாதப்போ
பொரியான விழி குருட ரென்று சொல்வார்
பாமேவும் இமைகளுக்கு வாதங் கண்டால்
பரிவான நேத்திரத்தின் வாயு வென்பார்
சீர்மேவுங் கேள்விநரம் புக்கே கண்டால்
செவிடுவந்து தோன்று மென்று சொல்லுவாயே. (127)

சொல்லுவாய் வாசனைநரம் புக்கே கண்டால்
சுகமான கந்தநாச மென்றே சொல்லு
அல்லுவாய் ருசிநரம்பு தனக்குக் கண்டால்
அப்பனே இரசநாச மென்று சொல்லு
தொல்லைசெய்ய இன்னும்வெகு வாத நோய்கள்
தொல்லுலகில் மாந்தருக்குக் காண்ப துண்டு

எல்லையில்லா வாதநோய் நேர்மை தன்னை
இயல்பாக அறிந்திடவே விபரங்கேளே. (128)

விபரமடா அசதி—சன்னி மூளை நோவு
விரிவான மூளையது மிருது வாகி
அவனிதனில் திடமாகப் போவ தாலும்
அப்பனே மூத்திரகுண்டிக் காய்வியாதி யாலும்
தவமுனிவர் தீர் காக்கை மேகரோகம்
தன்மையுள்ள முத்தண்டுக் கொடி வியாதி
அவமில்லாப் பரிசநரம் பழுத்தங் கண்டால்
அனுகுமடா வாதநோய் ஆகும் பாரே. (129)

அனுகுமடா மாமிசத்தின் வியாதி யாலும்
அப்பனே சூதகத்தின் பெருக்க லாலும்
குணமில்லா இரசம்வங்கம் தின்ன லாலும்
குடிகெடுத்த வாதமது உண்டா மப்பா
பணமதனைச் செலவழித்துப் பார்த்தா லுந்தான்
பயன்படாமல் போதல் மெத்த வுண்டு
கணப்பொழுதில் தீர்ந்துவிடும் ரோக மப்பா
கண்டிப்பாய்ச் சொல்லுகிறேன் கருதிக் கேளே. (130)

## சர்வாங்க வாத ரோகம்.

கேளடா சர்வாங்க வாத ரோகம்
கிளர்ந்துவரும் நேர்மைதனைச் சொல்லுவேன் பாரு
வாளடா உணர்ச்சியுடன் சவ்வு மற்ற
வண்மையுடன் சர்வாங்கம் உணர்ச்சி கெட்டு
நாளடா தினமெட்டில் மாண மாகும்
நலஞ்செய்ய இதற்குமருந் தொன்றுமில்லை
பாழடா செய்கின்ற பாரிச வாதம்



## பாரிச வாதம்.

பண்பான பாரிச வாத நேர்மை
பக்குவமாய் நீயறியப் பகர்வேன் கேளாய்
தன்மையுள்ள சரீரத்தில் பாதிப் பாகம்
தம்பித்துக் கையுடனே காலும் வீழ்ந்து
வண்மையுடன் வலதுபக் கத்திற் கேனும்
வலுவாக இடதுபக்கம் அதிகங் காணும்
கண்டிதமாய்க் கைமட்டும் சொரணை கெட்டு
கடினமாய் அசைவற்றுப் போகும் பாரே. (132)

போகுமடா ஒருவேளை ஒருபுறத்துக் கையும்
பொங்கமுடன் மற்றொரு புறத்துக் காலும்
யேகியே விழுந்துவிடும் விதத்தைப் பாரு
யென்மகனே வாயோரம் வியர்த்துத் தானும்ப்
பாகமதில் வாயிழுத்துக் கொண்டு போகும்
பக்குவமாய் நாக்கின்முனை வியாதி நிற்கும்
கூகைபோல் வார்த்தைதான் குளறிப் பேசும்
குழமையுள்ள கண்ணிமைகள் அசைவு போமே. 133

அசைவற்ற கண்ணிரண்டும் மூடிக் கொள்ளும்
அப்பனே கருவிழி துவாரங் காணும்
தசையற்ற பார்வைதான் கெருட பார்வை
தன்பரிசம் கெடும்புத்தி விகற்ப மாகும்
விசையுள்ள கண்ணீரில் நீருண் டாகி
விசனங்கள் மிகப்பட்டு நினைவுங் குன்றி
பசையற்ற கைகால்கள் முடங்கிப் போகும்
பாங்கான நோய்கள்தான் தீரும் பாரே. (134)

தீருதற்குக் குறியதனைச் சொல்லக் கேளாய்
தீரமான காலில்தான் சுபகுணங் காட்டும்
மாரியே அசாத்தியத்தில் பாய்ந்து விட்டால்
மகத்தான கைகால்கள் சூம்பிப் போகும்

கூறுகிறேன் நோய்கண்ட விடம்சில் லாகும்
குடிகெடுத்த மூளையது மிருது வாகில்
பாருநீ கைகாலு மிழுத்துக் கொண்டு
பண்புடனே பிகுவாகி யிருக்கும் பாரே. (136)

இழுக்கின்ற வாதமதுண் டாகும் நேர்மை
இருதயத்தில் நீயறிய இயம்புவேன் கேள்
மருக்கின்ற வலமூளை வியாதி கண்டால்
மகத்தான இடக்கைகால் விழுந்து போகும்
சேருகின்ற இடமூளை வியாதி கண்டால்
வலதுபுரம் காங்கால்கள் விழுந்து போகும்
பருக்கின்ற முளந்தண்டுக் கொடியோர் பக்கம்
பண்பாக யிந்தநோய் காண்பதுண்டே. (136)

உண்டாகும் வேளை தன்னில் வியாதிப்பக்கம்
உறுதியாய்க் கைகாலும் அசைவற்றுப்போம்
பண்டான இதில் சாதி யிரண்டே யுண்டு
பக்குவமாய் மூளையைச் சார்ந்த தொன்று
முண்டான முளந்தண்டுக் கொடி சார்ந்தொன்று
முக்கியமாய் இந்நோய்க்குச் சலன மில்லை
கண்டிதமாய் நரம்புகளும் கெடுதல் பட்டு
கதிப்பாக அசைவற்றுப் போகும் பாரே. (137)

பாரேநீ இந்தநோய் தீர வேண்டி
பக்குவங்கள் சொல்லுகிறேன் பண்பாய்க் கேளு
தீரேநீ திறமாகப் பேதிக் கீய்ந்து
திறமான இரசபற்பம் தன்னைத் தாக்கு
கூராக வைத்தியங்கள் செய்யும் போது
குறிப்பாக ரோகியுட கையுங் காலும்
நோகப் பிடித்துமே முடக்கிப் பார்த்தால்
நிச்சயமா யதின் குணங்கள் தெரியும் பாரே. (138)

# மருந்து செய் பகுதி.

(கந்தசாமி பிள்ளை, ரணவைத்தியம்,)
பெரிய கலையம்புத்தூர்.

---

## ரணக்களிம்பு.

வெண்கவுரி அரிதாரம் வேண்டும்மஞ்சள் நீலமுடன்
பண்டுவகைக்கு கழஞ்சுஒன்று பாகப்பச்சைபலம் ரண்டு
விண்டு அரைக்கும் எள்ளெண்ணெய் விதமாய்த்தண்ணீர் விட்டரைத்து
கண்டுகளித்துச்சீலையிலிட்டு கதித்தாணத்தின்மேல்போடே.

## விஷத்துக்குத் துவளை.

எருக்கலை, குப்பமேனி, வேலிப்பருத்தி, கருவூமத்தை, கருநொச்சி, நாராயணன் சள்ளி இவைகளையெல்லாம் சிறு நீரில் அரைத்து துவாலைசெய்து ஒரு ஓட்டில் நெருப்பிட்டு, இலுப்பைக்கட்டி, மயில்பீலி, புழுங்கலரிசித் தவிடு இந்த மூன்றும் பொடித்துப்போட்டு நோயாளிக்குப் புகையிடவும்.

## கட்டுவாதக் குளிகை.

ஜாதிக்காயைத் துளைத்து அதில் 5 உளுந்து எடையுள்ள அபினியை உள்செலுத்தி மஞ்சள் கவசம்செய்து சேலைமண் செய்து காயவைத்து புடமிட்டெடுத்து கவசத்தை நீக்கி காய்க்குச்சமன் பேரீச்சம்பழம் சேர்த்து முலைப்பால் விட்டரைத்து பச்சைப்பயர்பிரமாணம் உருட்டி உலர்த்தி வைத்துக்கொள்ளவும் குழந்தைகளுக்கு தேனில் கொடுக்கவும்.

## அகஸ்தியர் கும்மி.

கும்மி யடிபெண்காள் கும்மியடி
குரு பாதங்களைப்போற்றி கும்மியடி
நம்மவர் வைத்திய நன்மையை நாடி
நலமாய் கும்மி யடியுங் கடி 1

மானே கும்மி யடியுங்கடி ஓடி
மாதே கும்மி அடியுங் கடி
தேனே கும்மி அடியுங் கடி
தேசஞ் செழிக்கக் கும்மி யடியுங்கடி 2

அச்சு நடையான் பெருச்சாளி ஐயன்
அதன் மீது யேறி எழுந்த ருளி
இச்சி யடி விநாயகர் முன்னே
இதமாய்க் கும்மி அடியுங் கடி 3

சுக்குத் திப்பிலி சிறுதேக்குப் புடல்
சித்திர மூலம் ஓமம் காந்தி
ஒக்க நறுக்கி கியாழமிடச் சுரம்
ஓடிப் போகுங்—கும்மி அடியுங் கடி 4

சாதி லிங்கம் மிளகு வெங்காரம்
சரியள வான கந்த கமும்
வகைக்கு ரெண்டு விராக னெடையும்
வாளமும் இரு மடங்கு கூட்டி 5

கடுகுரோகணி விராக னெடை மூன்று
கலந்து பழச் சாற்றி லரைத்து
குண்டுமணி யள வுண்டை பண்ணி
குலாவிக் கும்மி யடியுங்கடி 6

வாதசுரம் பிற வீச்சு சன்னிக்கு
வகையாய் இஞ்சி சாற்றி லேயும்
காசத்துக் காடாதோடை யிலுமிட்
காணுமற் ஓடிப்போம் வியாதி யுமே. 7

# மூலிகைப் பகுதி.

## கடுகு.

இச்செடி அநேகமாய் மலைப்பாங்கான இடங்களில் பயிராக்கப் படுகின்றன. இதின் வேர் உஷ்ணகாரி, சுவேதகாரி குணங்களுள்ளவை. இதை அரைத்து உடலின்மேல் போட்டால் எரியும் குணம் உண்டு. சிலவேளைகளில் கொப்பளமுண்டாகவும்செய்யும். வேதனையுள்ளபாகங்களில்தடவலாம். இதன் காய்ந்த இலையைப் பொடித்து தேங்காய் எண்ணெய்யோடு சேர்த்து சிரங்குக்குப் போடலாம்.

நம் நாட்டுக் கடுகுக்கும் சீமைக் கடுகுக்கும் நிறத்தில் வித்தியாசமிருப்பினும் குணத்தில் அநேகமாய் ஒத்திருக்கிறது. நம்நாட்டுக் கடுகு கருத்திருக்கும். சீமைக் கடுகு வெள்ளையும் மங்கலான கருப்புமிருக்கும். கடுகிலிருந்து தைலம் இறக்கலாம். ஆனால் அதிகநாள் வைத்திருந்தால் அதன் காரம் குறைந்துவிடும். ஆதலால் உபயோகத்துக்கு புதிதாகச் செய்துகொள்வதே நலமானது. இத்தைலத்தை தமிழ் வைத்தியர்கள் பலவிதமாக உபயோகிக்கின்றனர்.

போஜன பதார்த்தங்களுடன் உபயோகிப்பதேனென்றால் இதிலுள்ள ஜீரண சக்திக் குணத்திற்காகவேதான். ஆனால் கொஞ்சமாய் உபயோகிக்கவேண்டும். ஒரு டம்ளர் தண்ணீரில் இரண்டுமூன்று ஸ்பூன் கடுகுப்பொடியைக்கலந்து உட்கொண்டால் சுகவாந்தியாகும். சாராயம் அதிகமாகக் குடித்து போதை மீறியவர்களுக்கும் வாந்தியாகவேண்டிய போதும் இதைக் கொடுக்கலாம்.

கடுகுத்தூள், அரிசிமா சம அளவு எடுத்து வெந்நீரில் கலந்து கிளறி வயிற்றுவலி, குடைச்சல், இவைகளுக்கு உபயோகிக்கலாம். எரிச்சலுண்டானால் நீக்கிவிடவேண்டும்.

இதன் தைலத்துடன் கர்ப்பூரம், ஆமணக்கெண்ணெய், ஸ்பிரிட் சேர்த்து வாதநோய்களுக்கு மேற்பூச்சு மருந்தாக உபயோகிக்கின்றனர்.

## மன்னர் மரண அநுதாபக் கூட்டம்.

1-2-1936ல் கூடிய பழனிரேஞ்சு இடையகோட்டை ஆரம்ப ஆசிரியர் சங்கத்தின் நடவடிக்கைகள்:-

மாட்சிமை தங்கிய ஐந்தாம் ஜார்ஜ் சக்கரவர்த்தியவர்களின் மரணத்தைக் குறித்து இச்சங்கத்தின் துக்கத்தைத் தெரிவித்துக் கொள்ளும் பொருட்டு சங்கத்தின் சகல நடவடிக்கைகளையும் ஒத்திவைக்கவேண்டுமென்று இடையகோட்டை போர்டு ஹையர் எலிமெண்டரி பாடசாலை உதவி உபாத்தியாயர் ஸ்ரீ பி. ரெங்கசாமி முதலியாரால் கொண்டு வரப்பட்ட தீர்மானம் ஏகமனதாக நிறைவேறியது. (என காரியதரிசி எழுதுகிறார்.)

---

# புது உலகம்.

(மார்ச் இதழ் வெளிவந்துவிட்டது.)

தோழர் சக்லத்வாலா அவர்களைப்பற்றி
ம. சிங்கார வேலு, B.A., B.L.,
மூலதனம் போது—ப. ஜீவானந்தம்.
முற்போக்கா? பிற்போக்கா?—சாமி சிதம்பரனார்.
அமெரிக்க பொதவுடைமைத் தலைவர் வரலாறு
A. S. K. அய்யங்கார், M. A.,
சீனாவில் பயங்கர ஆட்சி—ஜோகூர், M. சுப்பையா.

இன்னும் பல அறிஞர்களுடைய கட்டுரைகளையும், உலக நடவடிக்கைகளையும், தத்துவஞான விஞ்ஞான, பொருளாதாரக் குறிப்புகளையும் படித்துப் பயனடையுங்கள்.

சந்தா உள் நாடு ரூ. 1—8—0
வெளி நாடு 2 வெள்ளி

ஏஜண்டு இல்லாத இடங்களுக்கு உள்நாட்டுக்கு ரூ 6ம் வெளிநாட்டுக்கு ரூ 12ம் டிபாசிட்டுக் கட்டக்கூடிய ஏஜண்டுகள் தேவை.

விபரங்கட்கு எழுதுக:- "புது உலகம்" ஆபீஸ்,
ஜார்ஜ்டவுன், சென்னை.



## ஸ்ரீ பாஹ்ற ஹோட்டல்.

ஸ்ரீபாஹ்ற, சென்னை சிந்தாத்திரிப்பேட்டை நேப்பியர் பார்க்கில் அமைந்துள்ளது. ஆரோக்யமான கடல் காற்று, சுற்றிலும் அழகான நந்தவனம், விசாலமான அறைகள் முதலிய இயற்கை வசதிகளுடையது. ரயில்வே, ட்ராம்வேகளுக்கு வெகுசமீபம். சென்னை சட்ட சபை அங்கத்தினர்களும், பிரபுக்களும், கௌரவ குடும்பங்களும் தங்குமிடம். எல்லாசௌகரியங்களும சொற்ப செலவில் அடையலாம். சுவை உள்ள உணவுகள், பரிசுத்தமான பதார்த்தங்கள். சென்னைக்குவரும நீங்கள் ஒருமுறை ஸ்ரீ பாக்கில் தங்குங்கள்.

K. குப்புச்சாமி பிள்ளை,
புரோப்ரைட்டர்.

## "இந்திய கேசரி"

கொழும்பிலிருந்து வெளியாகும் ஓர் உயர்தரப் பத்திரிகை. இது ஜஸ்டிஸ் கக்ஷியின் கொள்கையைத் தழுவி, பிராமணரல்லாதாருக்காக உழைப்பதே இப்பத்திரிகையின் நோக்கம். பிராமணரல்லாதார் யாவரும் இதை வாங்கி வாசிக்கவேண்டும்.

வருட சந்தா ரூ, 3-0-0. சதம் 50.

மானேஜர்,
"இந்திய கேசரி",
தபால்பெட்டி, 362, கொழும்பு.

வியாபாரவிர்த்திக்கு 'சித்தனில்' விளம்பரம்செய்க

# நாடகப் பகுதி.

## நாகானந்தன்.

(லேட் H. ராமசாமி அய்யர் அவர்களால் எழுதப்பட்டது)

(100-ம் பக்கத் தொடர்ச்சி.)

அங்கம் 4] [களம் 2

சுந்திரகுமாரன். நாகானந்தன்.

காலம்—மாலை. இடம்—உத்தியானவனம்.

**சுந்திரகுமாரன்:-** (*தனிமொழி*) அட! பாவிக்கிழமே! உனக்கு வயது ஏற ஏற புத்தியும் மழுங்கியதா? இவ்வுத்தியானம் புருட வாடை வீச ஒண்ணாததன்றோ! இங்கன்றோ கன்னிகை சுகுணசுந்தரி அந்திநேரங்களில் உலாவுவது. க்ஷத்திரியர் சம்பிரதாயம் மறந்தனையோ? கன்னியர் வதுவையின் முன்னர் ஆடவர் எதிரில் தோற்றுதல் தகுமோ? அது பற்றியன்றோ கன்னியர் அவர்தம் மாடத்துறைவது; காவல் வாய்ந்தும் தலையெடுப்புக்குமேல் மதில்கள் பொருந்தியதுமான உத்தியானம் உலாவுவது. இப்படியிருக்க நாகானந்தனை இவ்வுத்தியானம் புக விடுத்ததென்னை? வந்தியர்பால் புகழ் கேட்டோ, உருப்பொறிந்த படம் நோக்கியோ, க்ஷத்திரிய யௌவனனுக்கும், யுவதிக்கும் பரஸ்பரம் காதல் எழுந்து தூதியர் மூலம் ஒருவர் மனம் மற்றவர் அறிந்து, அதனைப் பெற்றோர் தெரிந்து, அவர்கள் இருவர் மணந்தனிற்கிசைந்து அநுமதி தரின் ஒரு ஆடவன் உத்தியானம் புகலாம்; தன் காதலியைக் காணலாம்; தன்னுள்ளத்தெழுந்த விஷயமனைத்தையும் ஓதலாம்; அவ்விருவர் விவாககாலபரியந்தம் தங்கள் காதல் மாற்றமெல்லாம் கழறியவண்ணம் தனியே இருவரும் போந்து, மணங்கமழும் மரங்களின் நிழல்களிலும், லதாகிரகங்கள் தனிலும், சந்தமேடைகள் தனிலும், சற்றுமறைத் தடாகத்தமைந்த நீராழி மண்டபங்களிலும், தற்றோழியருள்





ஒருவரைக் காப்பாய்க்கொண்டு, சல்லாபங்கள் பல உல்லாசமே பேசி, உலாவலாம். விஷயமிவ்வாறிருக்க, குலந்தெரியாக் கயவன், ஊரறியாப் பரதேசன், வதியும் வீடில்லா முழுமோசன், பெற்றோர் தெரியா அனாதையன், தபோதனம் வளர்ந்த தாரித்திரியனாகிய நாகானந்தனையா, யாகசாலையுள் ஸ்வானத்தை நுழையவிட்டதுபோல் புக அநுமதி தந்தனை. அட! கெடுவாய்! இதனால் நீ குலத்தைக்கெடுக்கவந்த கோடாரிக்காம்பன்னாய். அட! இவன் உத்தியானம்புகுதல் தகுமோ? இதனுள் உலாவுதல் ஆகுமோ? சுகுணசுந்தரிமுன் போதல் கூடுமோ? ஒன்றிற்கும் தகுதியில்லா இழிபோனை நீ மேலோனெனக் கொண்டனையோ? அட! அறிவிலீ! மயானத்துப் பூத்த நறுமலர் பூஜைக்கு அருகமல்லாதது போன்று குலநலமில்லா இவன் ஏனைய குணமெலாம் சுகுணசுந்தரிக்கு ஏற்ற நாயகன் ஆக்குமா? ஏது இவ்விதப் பெருந்தவறிழைத்தாய்? மதியிழந்தனையா? (மௌனம்.)

ஏ! மனமே! என்ன சொல்கிறாய்? இவ்வரகுணன் பிரேமமெல்லாம் வீண் வேஷமே. இந்நாகானந்தன் இவன்றன் காமக்கிழத்தியின் மகனேயாகும். இவ்விரகசியம் வெளியாகாதிருத்தற்பொருட்டு அவனைச்சுந்திரானந்தர் தபோவனம் வளர்த்தினன். க்ஷத்திரியர்க்குரிய வித்தையெலாம் அவரைக் கொண்டு அவனுக்குக் கற்பித்தனன். அவன் பாண்டியர் பீஜமாதலின் எல்லாம் வல்லவனானான். அவனைச் சுகுணசுந்தரி மணாளனாக்கக்கருதி பூம்பொழில் போக்கினன், என்றோ? முற்கூற்றெல்லாம் உண்மையே இருக்கலாம். ஆயின் கடைக்கூற்றோ உலகவிருத்தமாயன்றோ இருக்கின்றது. ஏனெனில் முறைமை கருத நாகானந்தன் சுகுணசுந்தரிக்குச் சிற்றப்பன் முறையாதல் வேண்டும். ஆதலின் அவ்விருவர் மணத்தல் தகாது. பின்னர் நாகானந்தன் யார்? அவன் தபோதனர் சுந்திரானந்தர் வனம் வளர்வானேன்? க்ஷத்திரியர்க்குரிய கல்வி கற்பானேன்? வரகுணன் நெடுங்காலமாய் அடிக்கடி அங்கு போவானேன்? இவற்றைக்கருதின், நாகானந்தன் வரகுணனறிந்த உயர்குல க்ஷத்திரியன்வழி வந்தவனாகும். அதுபற்றி அவனுக்கும் இளவரசிக்கும் வதுவை செய்விக்க எண்ணி இவனை சுகுணசுந்தரிமுன் போக விடுத்தனன் போலும். ஆம்; ஆம்; இதுதான் ஏற்ற விஷயம். என் தந்தை இவ்வித சந்தேகத்தாலேயே அவனுடன் சோணாடு

போகேல் என்றதும், அவன்தன் நட்பு வேண்டேன் என்றதும், தீர்க்க யோசனையில்லா நானும் தந்தை சொல்லை அலக்ஷியம்செய்து என் தாழ்மைக்கும் நாகானந்தன் பெருமைக்கும் காரணமாய்க் காரியங்கள் செய்தேன்.

என் தந்தை என்னை அவள் காதல்பெறப் பின்னும் தூண்டுகின்றார். அவள் என்னை பக்கல் அணுகவொண்ணாது ஓட்டுகின்றாள். அதுபற்றி யான் அங்ஙனே இங்ஙனே உழலும் பாவினுட் கதிரன்ன உழல்கின்றேன். இவன் போட்டியால் சூரியன் முன் சந்திரனொளி மழுங்குவதுபோன்று என் பிரகாசமிழந்துள்ளேன். இவன் உள்ளவரை தந்தை மகனாகிய எங்கள் எண்ணமெல்லாம் வீண்மனோராஜ்யமாகும். ஆதலின் இவனை என் வழியினின்றும் எவ்விதமும் தொலைத்தல் வேண்டும். அவனை மறைவே நிழலென்னத் தொடர்ந்து அவன் செயல் முற்றும் கவனிப்பேன். (மறைதல்.)

### நாகானந்தன் பிரவேசம்.

**நாகானந்தன்:–** (தனிமொழி) என் குருநாதர் காமக் கேட்டினைப்பற்றி என்ன போதித்தனர்?

"நெஞ்சினு நினைப்பரோ நினைந்துளார் தம்மை
எஞ்சிய துயரிடை ஈண்டை யுய்த்துமேல்
வஞ்சிய பவக்கடல் வீழ்த்து மாதலால்
நஞ்சி னுந்தீயது நலமில் காமமே"

என்றன்றோ! அவ்வாறிருக்க இவ்வணங்கு எனக்கு அணங்கினையாக்குவானேன்? என் மனம் கனல்போல் அலைப்புண்டு ஆவி சோர்ந்து, உள்ளம் அவள்தனைத்தேடிச் செல்வானேன்? காமக்கேடு என் மனதிற் பற்றுக் காரணத்தாலன்றோ?

நெஞ்சமே! நீ சுந்தரமாதுதன் வடிவமீது இச்சை வைத்து உழல்கின்றாய். அவள் அணிந்துள்ள பொன்னையும், துயிலையும் பிறித்திடில் அவள்தன் தேகம் வெறும் புழுவும், மலமும் நிறைந்த கூடு அல்லால் பின்னை வேறாய் உளதோ? ஆதலின் அவள்தனை எண்ணி மயங்குதல் பிராந்தி. இவளை நீ நாடுவதால் பாபமும், பழியும் விளையும். பல்வகைப் புகழும், அறமும் ஒழியும். பலவகைத்துன்பம் அதனால்எய்தும். செய்துள நோன்பும், நல்லொழுக்கமும், மேன்மைகள் யாவும் கழியும். ஆதலின் அவள்தன் காமநோயகற்றுக.



ஏ! பாழும் மனமே! என்ன விடை பகர்ந்தனை?

"ஆயுந்தொறுந் தொறு மின்பந்தருங்கல் வியாங்கறிவும்
ஆயுந்தொறுந் தொறு மின்பந்தரும் அண்ணலார் கழல்கள்
தேயுந்தொறுந் தொறு மின்பந்தரும் சந்து தேக்குழலில்
தோயுந்தொறுந் தொறும் கோதா வின்பஞ் சுரந்திடுமே"

என்றோ! ஆம்; அஃதுண்மையே. ஆயின் நீ நாடும் பெண் யாவள்? சுகுணபாண்டியன் ஏகபுத்திரி. அவருக்குப்பின்னர் முடிசூடி பாண்டிநாடாளும் பாக்கியம் பெற்றவள். அவள் தன் அத்தை மகன் சுந்திரகுமாரனுக்கு நிச்சயம் செய்யப் பெற்றவள். ஆதலின் அவள்எனக்குஎட்டாக்கனி. அதனைப் பார்த்துக்கொட்டாவி விடுவது முடவன் கொம்புத்தேனைக் கண்டு அடைய இச்சித்ததை ஒக்கும். ஆதலின் அவள் தன் ஆசையை முற்றுமேஅகற்றாய்.

ஓ! இவள் நற்குலம், அரசுரிமை, அத்தை மகனுக்கெனச் செய்துள நிச்சயம் ஆகிய இவையெலாம் ஒரு பெருந் தடையாமோ? காந்தம் கண்டவிடத்து அயம் சேட்டியாதிருத்தலுமுளதோ? அன்று உன் நோக்கால் அவள் மனமுற்றிலும் கவர்ந்தாய். அவள் ஒட்டை மனத்தாள் ஆயினள். மனஞ்சென்றவிடம் நாடி இரவு பகல் அலைகின்றனள்; ஊண் துறந்தனள்; நல் உடை துறந்தனள்; அணி துறந்தனள்; தாய் தந்தையர் நாடாள்; நற்றோழியர் நாடாள்; உற்றார் உறவினர் நாடாள்; ஏகாந்தமே இனிதெனக் கொண்டாள் என்றன்றோ கேள்வி. இதுவே அவளுக்கு என்மீதுற்ற காமநோயிக்கு அறிகுறி. இன்றோ யான் யாவரும் நுழையொணா இப்பூஞ்சோலை அவள்தனைக்காணும் அவாவால் வந்துளேன். இன்னும் அவளைக்கண்டேனில்லை. அவள் முன்னமே இங்கு வந்து வேறு இடம் இருக்கின்றனளோ? அன்றி இன்னும் சற்று நேரத்திற்கெல்லாம் வருவளோ? அறியேன். இன்று அவளை எவ்விதமும் காணுதல் வேண்டும். காதல் முற்றும் ஓதுதல் வேண்டும். அதோ தோற்றுகிறதே ஓர் சந்திரகாந்த மேடை. அங்கு ஒருக்கால் தன் தோழியருடன் வந்து விளையாடிக்கொண்டு இருப்பினும் இருக்கலாம். ஆதலினங்கு செல்கின்றேன். (மறைதல்.)

### (சுந்திரகுமாரன் பிரவேசம்)

**சுந்திரகுமாரன்:–** (தனிமொழி) அடடா! யான் இச் செடி மறைவினின்றும் கேட்டதென்ன? நினைவா அன்றிக்

கனவா? உற்றார், பெற்றார் இன்னாரெனத் தெரியாக் கடையோன் ஞானானந்தனா? எட்டாக்கனியாம் சுகுணசுந்தரியை எண்ணிக் கொட்டாவி விடுவது. இவளோ பாண்டியநாட்டு இராணி. அவனோ குலமுறை தெரியா அனாதை. இதுசமயம் மன்னர் அருள் சற்றுப்பெற்றுளன். அவர்தம் தயை சற்றுத்தவறின் அவன் கதி என்னாம்? உண்ண உணவும், உடுக்க உடையும், தங்க வீடுமின்றிப் பரதேசியாய் ஒருநாள் தங்கியவிடம் மறுநாள் தங்காது கஞ்சி வரதப்பாவெனில் எங்கு வருதப்பாவென வினவிய வண்ணமாய் அலையவேண்டியவனன்றோ? இவ்வித நிலையினன் சுகுணசுந்தரிக்கு ஏற்ற நல் மணாளன். கானல் குயில் கருத்தாலும் உண்டு சிங்காரம். செம்போத்துச் சிவந்தென்ன அலங்காரம்? இவன் தன் மெய் வனப்பும், கண்கவரும் மார்பின் வனப்பும், கண்டோர் அஞ்சும் திண்டோள் வனப்பும், புலவரும் அருளும் புலமை வனப்பும் ஓர் வனப்பாகுமா? குலவனப்பும், குடி வனப்பும் குன்றியகாரணத்தால் இவன் கண்ணிலாகட்டழகனை நிகர்த்துளன். நீரினியல்பு நிலத்தினியல்பை ஒத்திருப்பது போன்று ஒருவன் குணம் குலத்தளவேயாகும். யானோ பாண்டியநாடாளும் சுகுணவழுதி குலவழி வந்தேன். நிறை கல்வி உள்ளோன், அஞ்சா வீரமுள்ளோன், நல் வனப்பும் வாய்ந்துள்ளேன். ஆதலின் அவனிலும் மேலோன். சற்று ஏற்றத் தாழ்வு உளதேனும் குலப்பெருமை வாய்ந்த எனக்கு அவன் நிகராவனோ? குணக்குன்றமாகிய சுகுணசுந்தரி தாய்தந்தையர் மனங்கோணப் பரதேசியாகி இவனை மணப்பாளா? அவன் பிதற்றெல்லாம் அவள் மீது அவன் கொண்டுள காம விகாரத்தால் அவன் மனத்தில் உதித்த மாற்றங்களாகும் அவ்வாறின்றி உண்மை யதுவேயாயின் இவனை ஒழித்திடின் அவள் காதல் பின்னர் யார்பால் செல்லும்? என்பாலன்றோ?

அடமூடா! எங்கடா செல்வதாய்ச் சொன்னாய்? சந்திரகாந்த மேடையா? ஹா! இந்த சுவானமா அந்த முத்துமாலையை பிச்சிப்பது? மதயானையை அங்குசத்தால் குத்தி அடக்குவது போன்று உன் காமநோயினை பிரகாரத்தால் ஓட்டுவேன். இதோ வந்தேன். (மறைதல்)



# மதிப்புரைகள்.

## தமிழ்த்தொண்டன்–பொங்கல் மலர்.

மதுரை தமிழ்த்தொண்டன் காரியாலயத்தாரால் வெளியிடப்பட்ட மேற்கண்ட மலர் 1. வரப்பெற்றோம். சிறந்த கட்டுரைகளுடனும், சினிமா விமர்சனங்களுடனும், ஆர்ட் பேப்பரில் பிரசுரிக்கப்பட்ட அநேக வர்ண படங்களுடனும், நேர்த்தியான ரேப்பருடனும் காணப்படுகிறது.

விலை பிரதி 1-க்கு 2. அணா.

கிடைக்குமிடம்:- தமிழ்த் தொண்டன் ஆபீஸ், மதுரை.

---

## விசித்திரன்.

இப்பத்திரிகையின் 6-வது ஆண்டு முதல் இதழ் வரப்பெற்றோம். இதில் வழக்கம்போல் ஹாஸ்யத்துணுக்குகள், நவரசம் ததும்பும் கதைகள், ஆராய்ச்சிக்கட்டுரைகள், உலக விநோதச் செய்திகள் நிறைந்து காணப்படுகிறது. அதிக பக்கங்களடங்கியது.

மாதமிருமுறை. தனிப்பிரதி விலை அணா 2. கிடைக்குமிடம்:

விசித்திரன் ஆபீஸ். 82-அர்மீனியன்தெரு, சென்னை.

---

## தண்டபாணி படம்.

பழனி, ஸ்ரீமான் P. நடராஜபண்டாரத்தால் பிரசுரிக்கப்பட்ட பழனி மலையும் தண்டபாணியும் தனித் தனியாக ஒரே தாளில் உள்ள படம் வரப்பெற்றோம். நல்ல ஆர்ட் பேப்பரில் பல வர்ணங்களுடன் நூதனமாயும், கவர்ச்சியுள்ளதாயும் காணப்படுகிறது. வேண்டுவோர் 2-அணா ஸ்டாம் பனுப்பி கீழ்கண்ட விலாசதாரிடம் பெற்றுக்கொள்ளலாம்.

P. நடராஜபண்டாரம், மலைக்கோவில் அயன்மிராஸ், பழனி.

---

## நல்வழி.

ஆரோக்கிய தூதிகை என்ற பெயருடன் வெளிவந்து கொண்டிருந்த மாசிகை இப்போது புனாவினின்று நல்வழி என்ற மாசிகையாக வெளிவரும் பிரதி 1. வரப்பெற்றோம். இதில் பல ஆராய்ச்சிக் கட்டுரைகள் காணப்படுவதோடு உயர்ந்த காகிதத்தில் அச்சிடப்பட்டும், படங்களுடனும், காணப்படுகிறது. வருட சந்தா ரூ. 3—0—0.

கிடைக்குமிடம்:– நல்வழி, தபால்பெட்டி 35, புனா.

## திருப்பேரூர் தலச்சிறப்பும்
## ஸ்ரீ ஆனந்த நடராசர் திருநடனக் காக்ஷியும்.

கோவை, ஸ்ரீமான் சி. கு. நாராயணசாமி முதலியார் அவர்களால் தொகுத்து வெளியிடப்பட்ட மேற்கண்ட புஸ்தகத்தின் பிரதி ஒன்று வரப்பெற்றோம். இதில் பேரூர் ஸ்தலத்தின் விசேஷம், நடராஜர் தத்துவம், நடன விசேஷம் முதலியன பற்றிய ஆராய்ச்சி விரிவுரைகளும், நல்ல ஆர்ட் பேப்பரில் பல படங்களும் பிரசுரிக்கப்பட்டிருக்கின்றன.

விலை பிரதி 1-க்கு அணா 1.

கிடைக்குமிடம்:- சி. கு. நாராயணசாமி முதலியார்,
தாமஸ் வீதி, கோயமுத்தூர்.

---

## தமிழ் முரசு.

"திரைகடலோடியும் திரவியந் தேடு" என்ற முதுரைக்கிணங்க, கடல்கடந்து, அந்நியநாடுகட்குச்சென்று வாணிபம், உத்தியோகம் முதலியன செய்துவாழும் தமிழர் ஒற்றுமைக்கும், முன்னேற்றத்திற்கும், சீர்திருத்தத்திற்கும் பெரிதும் உழைக்கும், சிங்கப்பூர், தமிழர் சீர்திருத்த சங்கத்தாரால் வெளியிடப்படுகிற "தமிழ் முரசு" வரப்பெற்றோம்.

பிரதி ஒன்று 1-காசுக்கு விற்கப்படுகிறது. கிடைக்குமிடம்:-
தமிழர் சீர்திருத்தசங்கம், 20-கிளாங் ரோடு, சிங்கப்பூர்.

---

நீங்கள் சந்தாதாரராக சேர்ந்துவிட்டீர்களா?

குறைந்தசந்தா! **ஜீவமணி** நிறைந்தசெய்திகள்!

ஓர் உயரிய மாதப்பதிப்பென எல்லோராலும் புகழப்படுவது.

இதில் தமிழ்நாட்டிலுள்ள சிறந்த ஆசிரியர்களால் உணர்ச்சி ததும்பும் சிறு கதைகளும், ஹாஸ்யக் கட்டுரைகளும் எழுதப்படுகின்றன. இன்னும், பாரபக்ஷமின்றி எழுதப்படும் அரசியல் வியாசங்கள், சினிமா விமர்சனங்கள், உலக அதிசயங்கள், மாதர்களுக்கென சீரிய கருத்தமைந்த மாதர்பகுதிகள் தொடர்ச்சியாக வெளிவருகின்றன.

மார்ச்சு மாதத்திலிருந்து "ஜெயமணி" என்ற சமூக சம்பந்தமான துப்பறியும் தொடர் நாவல் ஆரம்பமாகிறது.

குறிப்பு:- மாதிரிக் காப்பி இனாம். எல்லா ஊர்களிலும் ஜீவமணியை விற்பனைசெய்ய ஏஜன்சி தேவை.

உள்நாடு வருட சந்தா 0—12—0. மானேஜர்
வெளிநாடு ,, ,, ஜீவமணி

## கேசரி.

ஓர் சிறந்த மாதாந்தரப் பத்திரிகை.

நவரசம் ததும்பும் கதைகள், செந்தமிழ் கவிநயபாக்கள், சினிமா விமர்சனங்கள், உயரிய சீர்திருத்த கட்டுரைகள், ஆசிரியர் குறிப்புகள், ஹாஸ்ய துணுக்குகள் நிறைந்தது. அழகிய ஆர்ட் காகிதரேப்பரும், வசீகர முகப்பு படங்களும் கொண்டது.

வருடசந்தா ரூ. 1—0—0

கேசரி, கோயமுத்தூர்.

---

## "பத்ஹுல் இஸ்லாம்."

10-ம். ஆண்டு நடக்கிறது.

இஸ்லாம் மதத்தின் உயரிய கொள்கைகள், நபிநாயகத்தின் திருவாக்கியங்கள், மத ஆராய்ச்சிக் கட்டுரைகள், ஹாஸ்யத்துணுக்குகள், தொடர் கதை முதலியன நிறைந்து வெளிவரும் சிறந்த மாதப்பத்திரிகை.

சந்தா உள்நாடு ரூ. 2—0—0.
,, வெளிநாடு ரூ. 2—8—0.

கிடைக்குமிடம்:- மானேஜர், பத்ஹுல் இஸ்லாம்,
20-ஹைரோட், திருவல்லிக்கேணி, மதராஸ்.

## ஒற்றுமை.

(உயரிய மாத வெளியீடு.)

அரிய கட்டுரைகள், இனிய கதைகள், ஹாஸ்யத்திரட்டு. உலக விநோதங்கள் விமர்சனங்கள் முதலியன நிறைந்தது. சித்திர சகிதமானது. 13ம் ஆண்டு நடக்கிறது. இன்றே சந்தாதாரராய் சேருங்கள்.

மாதிரி பிரதி இனாம்.

வருடசந்தா

உள்நாடு ரூ. 1—0—0. வெளிநாடு ரூ. 1—8—0.

மானேஜர், 'ஒற்றுமை' சைதாப்பேட்டை, சென்னை.

# "சந்திரா"

## ஜவ்வாது ஊது பத்திகளை

உபயோகியுங்கள்.

தமிழ்நாட்டில் சிறந்து விளங்கிவருவதும், சமஸ்தானங்களிலும், ஜமீன்களிலும் நற்கியாதி பெற்று வருகிறதும், சிறந்த வாசனையுடையதும் இந்தப் பத்திகள் தான்.

ஒருமுறை வாங்கி குணத்தை அறியுங்கள்.

தயாரிப்பவர்:— G. குப்புசாமி,
தாமஸ் வீதி, கோயமுத்தூர்.

---

கிடைக்குமிடம்:—
மலையப்பசாமி வைத்தியசாலை, அடிவாரம், பழனி. S I

தமிழ்ப் பிரம சூத்திராசிரியர்,
கோவிற்பட்டி,
சாமி விருதை, சிவஞான யோகிகளால்
இயற்றப்பட்ட கீழ்க்கண்ட புஸ்தகங்கள்:-

### சிவஞான போத வினாவிடை.

இது தமிழ் மறையாகமங்களின் தொன்மையையும், பெருமையையும், ஆரியமறை ஆகமங்களின் பொருள் உண்மையையும் கூறும் நூல்.

விலை ரூ. 0—10—0.

---

### தேவோபாசனா தீபம்.

இது விக்கிரகாராதனையைப்பற்றி அன்னிய மதத்தார் கொண்டிருக்கும் தப்பபிப்ராயத்தைத் திருத்தும் நூல்.

விலை ரூ. 0—8—0.

---

### விபூதி ருத்ராக்ஷ தாரண நிரூபணம்.

விலை ரூ. 0—14—0.

N. B:-வேண்டியவர்கள் புஸ்தகக் கிரயத்தோடு தபால் செலவு 0—2—0 சேர்த்து ஸ்டாம்பாக அனுப்பலாம்.

கிடைக்குமிடம்:- மானேஜர்,

**சித்தன் காரியாலயம், பழனி S.I.**

# Never Mind
## How Weak You are?

OR

If you are a run down and over worried man or a woman of thin constitution and pale complexion let us build you a strong man or a woman.

### Try. C M. SAMI'S
# Gold Bhasma.

It relieves the patient promptly from the most distressing symptom by rapidly restoring the affected organs to their natural functions, and brings back health, energy and cheer to a doomed life.

**24 days use Rs. 10.**

---

## Gonorrhoea Cured.

I am glad to inform you of the effect of your **Gold Bhasma** which has cured me of Gonorrhoea and other Venereal Complaints within 24 days. Hence I request you to send again by V. P. P. 24 days medicine.

(Sd.) **M. M. M. Yousef,**
Rajathi Po. Papanasam Tq.

---

# Malayappasami Vaidyasala,
# PALNI. S. I.

# Thalaga Bhasma.

A most wonderful remedy for Coughs, Colds, Consumption, Bronchitis, Hoarseness, Tuberculosis Difficulty in breathing, Asthma and all disorders of the Lungs. It gives immediate relief.

**24 doses Rs. 4.**

---

# Naga Bhasma.

## (Cure for Piles.)

No operation is neccssary. This is the best cure for Piles, to be taken internally. All kinds of Piles, with their consequences, such as bleeding, Swelling, Pain fissures and all other complaints are cured.

**Price per phial Rs. 2.**

---

## Testimonial.

Eor the last 15 years I was suffering from Piles complaint and though I took both the English and Tamil medicines I did not get any cure. Afterwards I took Your Naga Bhasma for 48 days. My disease has been completely cured. There is no doubt that this is a Divine Medicine. Though a year had elapsed since I took this medicine the disease has not reacted upon me till now.

(Sd.) **Devasirvatham,**
Pasumalai.

---

# Malayapaasami Vaidyasala,
# PALNI. S. I.

## Awarded First Class Certificates and Gold Medals.

### A Real Boon to the suffering Humanity.

### C. M. SAMI'S

# MANMADHA PILLS.

The world renowned specific Pills for the impotent and hopeless persons and the best nervine tonic for weak constitution and nervous prostration. It increases Vitality, improves Digestion, stops Wet Dreams and purifies the blood. It is impossible to describe its wonderful and Magical powers

**It makes old man as powerful as the young**

**Try and test it once**

**You will feel its Magical effect within a day.**

**No restriction of diet.**

**Price 20 Pills Rs. 2.**

(Postage Extra.)

---

## Testimonial.

It is needless to praise your Manmadha Pills as the patent Medicine. After using the same twice, I recommended it to some of my friends who have also realised the same effect. Of all other medicines I can only guarantee that this is the best Medicine to give strength, vigour ane vitality.

(Sd.) **A V. Periasami Gounder,**
Village Munsif,
Velampalayam,

---

# *Malayappasami Vaidyasala,*
# *PALNI. S. I.*

189529

# KARPHA OIL.

**It is a real boon to the fair sex.**

It cures all cases of painful Menstruation, Heaviness in the abdomen, Pain in the Waist, Stomach ache, Scanty discharges of blood, Irregular Menses and all other complaints connected with the womb.

This is a medicine which prevents habitual abortion and fecilitates easy conception.

(Try once.)

**A phial costs Rs. 2.**

## Indeed Marvellous!

Your Valuable Karpha Oil has indeed shown Marvellous effect to my wife who was suffering from Stomach ache and Menstrual complaints for the last 12 years.

(Sd.) **R. N. Seshappa Chettiar,**
Thondamuthur.

Your Karpha Oil has cured my daughter at Udamalpet to a great extent, all her complaints connected with the womb She is now the mother of a child and both of them are doing well.

(Sd.) **V. A. K. Sami,**
Varadarajapuram,.
12-10-27. Ramachaudrapuram ro.

***Malayappasami Vaidyasala,***
***PALNI. S. I.***

விடுதலை! விடுதலை!!

பறையருக்கும் இங்குதீய
புலையருக்கும் விடுதலை.

# "விடுதலை".

ஓர் உயரிய வாரமிருமுறை தமிழ் பத்திரிகை.

சமூக, மத, அரசியல் துறைகளில் பாரத மக்களின் விடுதலைக்கும், முன்னேற்றத்திற்கும் போராடும் பத்திரிகை இஃதொன்றே.

ஒவ்வொரு சமூகத்துக்கும் இன்று அத்யாவசியமானவை எவை? சம நீதி, சம அந்தஸ்து, ஐக்யம், உண்மை ஜனநாயகம், அரசியல் விடுதலை, பொருளாதார உயர்வு. இத்தகைய உயர்ந்த லட்சியங்களில் ஆர்வம் உள்ள ஒவ்வொருவரும் விடுதலையைப்படிக்க வேண்டியதவசியம். இன்றே சந்தாதாரராய் சேருங்கள். விபரங்களுக்கு எழுதவும்.

[redacted]ளரவ காரியதரிசி,
[redacted]டுதலை"
14, மவுண்ட் ரோடு, சென்னை.

Regd. No. M. 3210.


வாலிபம் பெற

# மன்மதக் குளிகை

உபயோகியுங்கள்!

கலவியில் இன்பம் கொடுக்கும்.

எதிர்பாராத
தேகபுஷ்டி, போகசக்தி, வீரியவிர்த்தி
அடைவது நிண்ணயம்.



என்றுமிராத
தைரியம், மனோற்சாகம், ஆரோக்கியம்
பெறுவது நிச்சயம்.

சரீரத்துக்கு வலுவைக்கொடுத்து,
ஆண்மையை அதிகப்படுத்தி, இரத்தத்தை
சுத்திகரித்து, தாதுவிர்த்தியையும்,
திடகாத்திரத்தையும் தரும்.

20 குளிகை விலை Va 60-குளிகை ரூ. 5.

**Malaya_ pasami Vaidyasala,**

**PALNI. S. I.**

நித்தியானந்த பிரஸ், பழனி.


**Edited, Printed & Published by Dr. C. P. Sami at the Nityananda Press, Palni.**